திமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

## கிராமத்தில் வேளாண் பயிற்சி பெறும் மாணவிகள்

அண்ணாமலைப் பல்கலைக்கழக வேளாண் துறை இறுதியாண்டு மாணவிகள் சிதம்பரம் அருகே உள்ள கடவாச்சேரி கிராமத்தில் தங்கி பயிற்சி பெற்று வருகின்றனர்.

இதன் தொடக்க விழா அங்குள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. ஒன்றிய கவுன்சிலர் ரா.மாமல்லன் தலைமை வகித்தார். ஊராட்சி மன்றத் தலைவர் எஸ்.மோகன்ராஜ் முன்னிலை வகித்தார்.

பின்னர் விவசாயிகளுடன் மாணவிகள் கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைபெற்றது. வேளாண் தொடர்பான கண்காட்சியை மாணவிகள் நடத்தினர். இதை திரளான விவசாயிகள் பார்வையிட்டு மாணவிகளிடம் வேளாண் தொழில்நுட்பங்கள் குறித்து கேட்டறிந்தனர்.

## 20-ல் விவசாயிகள் குறைதீர்வு கூட்டம்

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வரும் செப்டம்பர் 20-ஆம் தேதி நடைபெற உள்ளதாக ஆட்சியர் லி. சித்ரசேனன் அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கை: காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வரும் செப்டம்பர் 20-ஆம் தேதி காலை 11 மணிக்கு விவசாயிகள் குறைதீர்க் கூட்டம் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில், விவசாயிகள் மற்றும் விவசாயிகளின் பிரதிநிதிகள் பெருவாரியாக கலந்து கொண்டு, விவசாயம், அது தொடர்பான புகார்கள் தொடர்பாக மனுவாகக் கொடுக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## சிறு தானிய சாகுபடி தொழில்நுட்பப் பயிற்சி

அட்மா திட்டத்தின் சார்பில் சிறு, குறு தானியங்கள் சாகுபடி தொழில் நுட்பங்கள் பற்றிய விவசாயிகளுக்கான தொழில்நுட்ப பயிற்சி முகாம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

துணை இயக்குநர் செண்பகராஜ் தலைமை வகித்தார். இதில், விருதுநகர் பகுதியில் இருந்து தேர்வு செய்யப்பட்ட விவசாயிகள் 50 பேர் கலந்து கொண்டனர்.

வேளாண் நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் ஜவஹர் சிறு, குறு தானியங்களின் சாகுபடி செய்வதன் முக்கியத்துவம் பற்றிவிளக்கமாக எடுத்துரைத்தார்.

குதிரைவாலி, தினை, கேப்பை, வரகுச் சாகுபடி பற்றி பேராசிரியர் ரெங்கராஜ் விளக்கிக் கூறினார். சிறுதானியங்களின் ரகங்கள்,பற்றியும் உதவி பேராசிரியர் உமாமகேஸ்வரி மற்றும் இளமதி ஆகியோர் விரிவாக எடுத்துரைத்தனர். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை விருதுநகர் மாவட்ட உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை அலுவலக அலுவலர்கள் செய்திருந்தனர்.

## கோபியில் மக்காச்சோளம் அறுவடை மும்முரம்

கோபி பகுதியில் மக்காச்சோளம் அறுவடை விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. மக்காச்சோளத்துக்கு கிடைக்கும் கூடுதல் விலையால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

கோபி மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில் மக்காச்சோளம் அறுவடை விறுவிறுப்பாக துவங்கி உள்ளது. கடந்தாண்டை விட மக்காச்சோளத்துக்கு கூடுதல் விலை கிடைப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

தமிழகத்தில், கோவை,திருப்பூர்,ஈரோடு,சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் ஏராளமான கோழிப்பண்ணைகள் உள்ளது. ஈரோடு மற்றும் அதனை சுற்றியுள்ள மாவட்டங்களில் கோ 1, சுவான் ரக வகை மக்காசோளம் இறவை மற்றும் மானாவாரிப் பருவத்தில் பயிரிடப்படுகிறது. புரதச்சத்து அதிகம் உள்ள இந்த மக்காச்சோளம் தமிழகத்தில் கோழி தீவனமாகவும், உணவாகவும் பயன்படுத்தப் பட்டுவருகிறது. கேரளா மாநிலத்தில் முக்கிய உணவுப் பொருளாக மக்காசோளம் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

கோபி வட்டாரத்தில் நம்பியூர், சிறுவலூர், குருமந்தூர், கடத்தூர், கொளப்பலூர் உள்ளிட்ட பகுதிகளிலும், டி.என்.பாளையம் வட்டாரத்தில் கள்ளிப்பட்டி, துறையம்பாளையம், கணக்கம்பாளையம், பங்களாப்புதூர் பகுதிகளில் மஞ்சள், சேனைக்கிழங்கு போன்ற பயிர்களில், மக்காச்சோளம் ஊடுபயிராக பயிரிடப்பட்டுள்ளது.

கோபி வட்டாரத்தில் விளையும் மக்காச்சோளம், கேரளா மாநிலத்துக்கு அதிகளவில் அனுப்பப்படுகிறது. கடந்த ஆண்டை விட நடப்பாண்டு கூடுதல் விலை கிடைப்பதால் இப்பகுதி விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## மாணவர்களுக்கு கிராமப்புற வேளாண் பயிற்சி

செய்யாறை அடுத்த வேளியநல்லூரில் வேளாண் கல்லூரி மாணவர்களுக்கு கிராமப்புற வேளாண் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

கலவை ஆதிபராசக்தி வேளாண்மை கல்லூரியில் பயின்று வரும் இறுதியாண்டு மாணவர்களுக்கு செய்யாறு வட்டார வேளாண்மைத் துறை கிராமப்புற வேளாண் அனுபவ பயிற்சியை அளித்து வருகிறது. மாணவர்களுக்கான இந்த பயிற்சியினை

தொடங்கி வைத்த உதவி இயக்குநர் சி.ஏழுமலை, உதவி வேளாண்மை அலுவலர்களுடன் கிராமத்தில் பணிபுரிய வேண்டிய வேளாண் ஆலோசனைகளை தெரிவித்தார்.

கிராமப்பகுதிக்கு தினமும் சென்று விவசாயிகளுடன் கலந்துரையாடுதல், அடிப்படை தகவல்களை சேகரித்தல், மண்மாதிரியை பரிசோதனைக்கு எடுத்தல் போன்ற பணியில் மாணவர்கள் ஈடுபட்டிருந்தனர்.

இப்பயிற்சியின் நினைவாக உலகம் வெப்பமயமாதல் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் செவ்வாய்க்கிழமை வேளியநல்லூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் மரக்கன்றுகள் நடும் பணியை மேற்கொண்டனர். இந்நிகழ்ச்சியில் கிராம நிர்வாக அலுவலர் மாலதி, ஊராட்சி மன்றத் தலைவர் விஜய், தலைமை ஆசிரியர் பழனிச்சாமி ஆகியோர் கலந்துகொண்டனர்.

## சம்பங்கி நடவுக்கு ஏற்ற தருணம்

சம்பங்கி விதைப்புக்கு ஏற்ற தருணம் நிலவுவதால், நடவுப் பணியைத் தொடங்க விவசாயிகளுக்கு நாமக்கல் வானிலை ஆய்வு

மையம் அறிவுறுத்தியுள்ளது.

இதுகுறித்து அந்த மையம் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

நாமக்கல் மாவட்ட வானிலையில் அடுத்த 3 நாள்களுக்கு (செப்.11 முதல் 13-ஆம் தேதி வரை) வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும்.

மாவட்டத்தின் பல இடங்களிலும் 3 மிமீ முதல் 4 மிமீ. வரை மழை பெய்ய வாய்ப்புள்ளது.

காற்றின் திசைவேகம் மணிக்கு 4 கிமீ முதல் 5 கிமீ வேகத்தில் மேற்கிலிருந்து வீசக்கூடும்.

வெப்பநிலை குறைந்தபட்சம் 71.6 டிகிரி பாரன்ஹீட் முதல் அதிகபட்சம் 86 டிகிரி பாரன்ஹீட் வரையும், காற்றின் ஈரப்பதம் குறைந்தபட்சம் 52 சதம் முதல் அதிகபட்சம் 85 சதம் வரை இருக்கும்.

கோழிப் பண்ணையாளர்களுக்கு: இதுவரை பெய்த தென்மேற்குப் பருவ மழையால், பகல் மற்றும் இரவு வெப்ப அளவுகள் கணிசமாகக் குறைந்துள்ளன.

இதன் தொடர்ச்சியாக, கோழிகளிடையே தீவன எடுப்பும், முட்டை உற்பத்தியும் இயல்பாக இருக்கும்.

இருப்பினும், தீவன மூலப் பொருள்களின் ஈரப்பதம் மற்றும் பூஞ்சான நச்சுக்களின் காரணமாக கோழிகளிடம் சற்று அதிகமாகக் கழிச்சல் காணப்படுகிறது.

இதைத் தடுக்க தீவனத்துடன் புரோபயாட்டிக்ஸ் என்ற தடுப்பு மருந்தை டன்னுக்கு 100 கிராம் வீதம் கலந்து 7 முதல் 10 நாள்களுக்கு அளிக்க வேண்டும்.

விவசாயிகளுக்கு: தற்போது கிடைக்கும் மழையைப் பயன்படுத்தி நாற்று விடாமல் விதைப்புக் கருவி மூலம் நேரடியாக நெல் விதைக்கலாம். ஒரு ஏக்கர் விதைக்க 10 கிலோ வரை தேவைப்படுகிறது.

இதற்கான விதைக் கருவி நாமக்கல் வேளாண் விரிவாக்க நிலையத்தில் செயல் விளக்கத்திற்காக உள்ளது,

சம்பங்கி சாகுபடிக்கு தற்போது நடவு பருவமாகும். எனவே, 50 கிலோ விதைக் கிழங்கை 10 லிட்டர் சாணிப்பால், 30 கிராம் டிரைகோ டெர்மா விரிடி மற்றும் 30 கிராம் சூடோமோனோ ஃப்ளூரென்ஸிஸ் கலவைக் கரைசலில் கலந்து, 1 முதல் 2 மணி நேரம் ஊற வைத்து, 2 அடி பார் அமைத்து 1.5க்கு 1.5 அடி இடைவெளியில் நடவு செய்ய வேண்டும்.

மழைக் காலங்களுக்கு முன் கறவை மாடுகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசியை அருகே உள்ள கால்நடை மருந்தகங்களில் போட வேண்டும்.

6 மாதங்களுக்கு மேல் வயதுடைய கன்றுகளுக்கும், கன்று ஈன்ற கறவை மாடுகளுக்கும் வருடத்துக்கு ஒருமுறை கோமாரி நோய் தடுப்பூசி போட வேண்டும்.

பன்றிகளைத் தாக்கும் பன்றிக் காய்ச்சல் அல்லது பன்றி காலரா நோய்க்குத் தடுப்பூசி போடுதல் மிகவும் அவசியமாகும்.

இந்த நோயால் வளர்ந்த பன்றிகளைவிட குட்டிகள் அதிகம் பாதிக்கப்படுவதால், குட்டிகளைத் தாயிடமிருந்து பிரித்தவுடன் தடுப்பூசி போட வேண்டும்.

பிறகு ஒவ்வொரு வருடமும் தடுப்பூசி போட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மானிய உதவிகள் பெற விவசாயிகளுக்கு அழைப்பு

சப்போட்டா, மிளகாய், பூக்கள் சாகுபடி செய்ய உள்ள விவசாயிகளிடம் இருந்து தமிழக அரசின் மானிய உதவிகள் பெற விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

இதுகுறித்து, வட்டாரத் தோட்டக் கலை உதவி இயக்குநர் அசோகன் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

உயர் தொழில்நுட்ப உற்பத்தித் திறன் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி அதிக மகசூல் பெற சப்போட்டா, மிளகாய், பூக்கள் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு 50 சத மானிய உதவிகள் வழங்கப்பட உள்ளன.

இந்தத் திட்டத்தின் கீழ், சப்போட்டா சாகுபடிக்கு ஒரு ஹெக்டருக்கு ரூ.16,500-ம், மிளகாய்க்கு ரூ.12,000-ம், பூக்களுக்கு ரூ.12,000-ம் வழங்கப்பட உள்ளன.

மோகனூர் வட்டார விவசாயிகள் இந்தத் திட்டத்தில் விண்ணப்பித்துப் பயன் பெறலாம். மேலும், விவரங்களுக்கு மோகனூர் வட்டாரத் தோட்டக் கலை உதவி இயக்குநர் அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கெண்டை மீன் வளர்க்க இலவசப் பயிற்சி

கெண்டை மீன்கள் வளர்க்க இலவசப் பயிற்சி நாமக்கல்லில் செப்டம்பர் 17-ஆம் தேதி (செவ்வாய்க்கிழமை) அளிக்கப்பட உள்ளது.

மோகனூர் சாலையிலுள்ள வேளாண் அறிவியல் நிலையத்தில் அன்று காலை 9 மணிக்கு வழங்கப்படும் இந்தப் பயிற்சி முகாமில், வளர்ப்புக்கான கெண்டை மீன் இனங்கள், வளர்ப்புக்கு இடம் தேர்வு செய்தல், மீன் குளம் தயாரிப்பு மற்றும் மீன் குஞ்சுகள் இருப்பு செய்தல், மீன் வளர்ப்பில் தீவன மேலாண்மை, நீராதர மேலாண்மை, நோய் மேலாண்மை மற்றும் வளர்ப்பு பொருளாதாரம் உள்ளிட்ட அனைத்து தொழில்நுட்பங்கள் குறித்தும் பயிற்சி அளிக்கப்படும். விவசாயிகள், பண்ணையாளர்கள், ஊரக மகளிர், இளைஞர்கள் பங்கேற்று பயிற்சி பெறலாம்.

பங்கேற்க விருப்பமுள்ளவர்கள் நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் 16-ஆம் தேதிக்குள் தங்களது பெயரைப் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

மேலும் விவரங்களுக்கு 04286-266345, 266244, 266650 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு பெறலாம் என அந்த நிலையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் பா.மோகன் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நாமக்கல் மண்டலத்தில் முட்டை உற்பத்தி வீழ்ச்சி

தீவன மூலப் பொருள்களின் விற்பனையில் இடைத் தரகர்களின் ஆதிக்கம் அதிகரித்து வருவதால், கோழிகளுக்கான தீவனங்களின் விலை மிகக் கடுமையாக உயர்த்தப்பட்டு வருகிறது. இதனால், பண்ணையாளர்களுக்கு ஏற்படும் நஷ்டத்தை தவிர்க்க நாமக்கல் மண்டல முட்டை உற்பத்தி படிப்படியாகக் குறைக்கப்பட்டு வருகிறது.

தேசிய அளவில் முட்டை உற்பத்தியில் நாமக்கல் தனிச் சிறப்பு பெற்று விளங்குகிறது. இங்குள்ள 800-க்கும் அதிகமான பண்ணைகள் மூலம் 4.38 கோடி முதல் 5 கோடி முட்டைக் கோழிகள் வளர்க்கப்பட்டு, நாளொன்றுக்கு 3.5 கோடி வரை முட்டைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. அவை தமிழகம், புதுச்சேரி மற்றும் கேரள மாநிலங்களுக்கு விற்பனைக்கு அனுப்பப்படுகின்றன. தவிர, ஓமன், ஆப்கானிஸ்தான், ஆப்பிரிக்கா ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதியும் செய்யப்படுகின்றன.

2011-12-ஆம் ஆண்டில் சராசரியாக நாளொன்றுக்கு 2.77 கோடி முதல் 3.15 கோடி வரை முட்டைகள் உற்பத்தியான நிலையில், கடந்த நிதியாண்டில் (2012-13) நாளொன்றுக்கு 3.51 கோடி முட்டைகளாக உற்பத்தி அதிகரித்தது. நிகழ் நிதியாண்டின் ஏப்ரல் மாதம் ஒரு நாளைக்கு 3.54 கோடி முட்டை உற்பத்தி செய்யப்பட்ட நிலையில், மே மாதத்திலிருந்து உற்பத்தி சரிவடைந்து வருவதை நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு புள்ளிவிவரங்கள் உறுதிப்படுத்துகின்றன.

இதன்படி, மே மாதத்தில் நாளொன்றுக்கு 3.48 கோடி முட்டைகளும், ஜூனில் 3.44 கோடி, ஜூலையில் 3.33 கோடி, ஆகஸ்ட் மாதம் 3.26 கோடி என முட்டை உற்பத்தி சரிவடைந்துள்ளது.

அந்த வகையில், கடந்த 4 மாதங்களில் மட்டும் 28.46 லட்சம் முட்டைகள் உற்பத்தி குறைந்துள்ளது. முட்டை உற்பத்தி குறைவுக்கு பண்ணைகளில் முட்டை உற்பத்திக்காக விடப்படும் கோழிக் குஞ்சுகளின் எண்ணிக்கை வெகுவாகக் குறைக்கப்பட்டதே முக்கியக் காரணம் என்கிறார் கால்நடை பண்ணைப் பொருள்கள் வர்த்தகர் சங்கப் பொதுச் செயலாளர் பி.வி.செந்தில்.

அவர் மேலும் கூறியது:

கடந்த ஆண்டு ஏற்பட்ட வறட்சி மற்றும் இடைத் தரகர்களின் ஆதிக்கத்தால், கோழிகளுக்கானத் தீவன மூலப் பொருள்களின் விலை ஓராண்டில் மிகக் கடுமையாக உயர்ந்துவிட்டது. குறிப்பாக, கடந்தாண்டு ரூ.23 ஆயிரத்துக்கு விற்கப்பட்ட ஒரு டன் சோயா நிகழாண்டு ரூ.36 ஆயிரத்துக்கும், சூரியகாந்தி புண்ணாக்கு ஒரு டன் ரூ.13 ஆயிரத்திலிருந்து ரூ.23 ஆயிரமாகவும், எண்ணெய் எடுத்த தவிடு ஒரு டன் ரூ.8 ஆயிரத்திலிருந்து ரூ.13 ஆயிரமாகவும், மக்காச்சோளம் 100 கிலோ ரூ.1,400-லிருந்து ரூ.1,650ஆகவும், கருவாடு கிலோ ரூ.22-லிருந்து ரூ.35ஆகவும் உயர்ந்துள்ளது. தீவன மூலப் பொருள்களின் விலையேற்றத்துக்கு ஏற்ப முட்டைக் கொள்முதல் விலை உயரவில்லை. தவிர, கொள்முதல் விலையில் நிலவும் நிலையற்ற தன்மையால் ஏற்படும் நஷ்டங்களைத் தவிர்க்க முட்டைக்காக விடப்படும் கோழிக் குஞ்சுகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளது என்றார் அவர்.

இதுகுறித்து தமிழ்நாடு கோழிப் பண்ணையாளர்கள் சங்கத் தலைவர் ஆர்.நல்லதம்பி கூறியது:

பண்ணைகளில் வளர்க்கப்படும் முட்டைக் கோழிகளுக்கும், பிராய்லர் கோழிகளுக்கும் மிக அதிகளவில் தேவைப்படும் புரதச்சத்து சோயாவில் மட்டுமே கிடைக்கிறது. மகாராஷ்டிரம், பஞ்சாப், குஜராத் உள்ளிட்ட வட மாநிலங்களில் விளையும் இந்த சோயா முழுவதையும்

ஒரு சில இடைத் தரகர்கள் மொத்தமாகக் கொள்முதல் செய்து கொண்டு, செயற்கையான தட்டுப்பாட்டை ஏற்படுத்தி விலையை உயர்த்திக் கொண்டுள்ளனர்.

தீவன மூலப் பொருள்களின் விற்பனையில் இடைத் தரகர்களின் ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்த மத்திய, மாநில அரசுகள் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் அல்லது மக்களின் அத்தியாவசிய உணவுப் பொருளாகியுள்ள கோழி முட்டைகளின் உற்பத்திக்கு தீவன மூலப் பொருள்களை மானிய விலையில் கிடைக்க வழிவகை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார் அவர்.

## வனவியல் விரிவாக்கம் மூலம் விவசாயிகளுக்கு இலவச மரப் பயிர்கள்

கிருஷ்ணகிரி வனவியல் விரிவாக்க கோட்டத்தின் மூலம் விவசாயிகளுக்கு நீண்டகால மரப் பயிர்கள் மற்றும் குறுகிய கால மரப் பயிர் வகைகளும் இலவசமாக வழங்கப்பட உள்ளன.

இதுகுறித்து வனவியல் விரிவாக்கக் கோட்ட அலுவலகம் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வனவியல் விரிவாக்க கோட்டத்துக்கு உள்பட்ட கிருஷ்ணகிரி, போச்சம்பள்ளி, ஊத்தங்கரை ஆகிய வட்டங்களில் உள்ள விவசாயிகளுக்கு நிறைந்த பயன் தரக்கூடிய உயர் ரக மரக் கன்றுகளான தேக்கு, சில்வர் ஓக், மலை வேம்பு, பெருமரம், வேங்கை, குமிழ், வேம்பு, பலா, நாவல், நெல்லி, புளி, சீத்தா போன்ற நீண்ட கால மரப் பயிர்களும், சவுக்கு, தைலம், போன்ற குறுகிய கால மரப் பயிர்களும் இலவசமாக பட்டா நிலங்களில் நடவு செய்து கொடுக்கப்பட உள்ளது.

எனவே, மரம் நடவு செய்ய ஆர்வமுள்ள விவசாயிகள் தங்களது நிலத்திற்கான பட்டா, சிட்டா, குடும்ப அட்டை நகல் மற்றும் பாஸ்போர்ட் அளவு புகைப்படம் ஆகியவற்றுடன் கிருஷ்ணகிரி வனவியல் விரிவாக்கக் கோட்ட அலுவலகத்தை அணுகி பயன் பெறலாம். மேலும், தொடர்புக்கு: வனவியல் விரிவாக்க அலுவலர் தொலைபேசி எண்: 04343-293016, செல்போன்: 94426 90086 எண்களில் தொடர்பு கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மா கவாத்து செய்தல்: மாணவிகள் செயல் விளக்கம்

கிருஷ்ணகிரி அருகே சிக்கப்பூவத்தியில் மா கவாத்து செய்து அதிக மகசூல் பெறுவது குறித்து, மேல்மருவத்தூர் வேளாண் மற்றும் தோட்டக்கலைத் துறை கல்லூரி மாணவிகள் விளக்கினர்.

மா மரங்களில் வேகமான வளர்ச்சியைத் தடுக்கவும், நல்லக் காற்றோட்டம் மற்றும் சூரிய ஒளிப் படுதலை அதிகரிக்கவும் தேவையற்றக் கிளைகளை நீக்கி கவாத்து செய்வது இன்றியமையாதது.

மா மரங்களில் தழைப் பகுதியை வெட்டுவது, தண்டுகளைக் குறைப்பது ஆகிய இரண்டு வகைகளில் இந்தக் கவாத்து முறையைச் செய்யலாம். ஆகஸ்ட் முதல் செப்டம்பர் மாதங்களுக்குள் இதைச் செய்து முடிக்க வேண்டும்.

மேலும், தழைப் பகுதியை வெட்டும் போது, மரத்தில் குறுக்கும், நெடுக்குமாகச் செல்லும் கிளைகள், நோய் தாக்கிய கிளைகளை நீக்கலாம். இதன் மூலம், சூரிய ஒளி கிளை பரப்பு முழுவதும் உள் புகுந்து மரங்கள் நன்கு பூத்து அதிக மகசூல் கிடைக்கும். இந்த முறையை 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை செய்யலாம்.

தண்டுப் பகுதியை குறைக்கும் முறையில், மரத்தில் மேல்பரப்பில் உள்ள தண்டுகளைக் குறைத்து சூரிய ஒளியை நன்கு உள்புகச் செய்வதால், பூத்தல், காய்த்தல் போன்ற செயல்பாடுகள் ஊக்குவிக்கப்படுகிறது. இது 5 வயதுக்கு மேற்பட்ட மரங்களில் மேற்கொள்ளலாம். இதன் மூலம் அதிக மகசூல் பெறலாம் என மாணவிகள் விளக்கினர்.

மாணவிகள் ஆர்யலட்சுமி, சித்ரா, சுகன்யா, சிவரஞ்சினி, ராமேஸ்வரி, இளவரசி ஆகியோர் விவசாயிகளுக்கு செயல்விளக்கம் செய்து காண்பித்தனர்.

## மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு

சேலம் மாவட்டம் மேட்டூர் அணைக்கு செவ்வாய்க்கிழமை நீர் வரத்து அதிகரித்தது.

மேட்டூர் அணையின் நீர்மட்டம் 100 அடியைக் கடந்த நிலையில் கடந்த மாதம் 2-ஆம் தேதி பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டது. அணைக்கான நீர்வரத்து குறைந்து வந்ததால், அணையின் நீர்மட்டமும் தொடர்ந்து குறைந்து வந்தது. இந்த நிலையில், காவிரி டெல்டா மாவட்டங்களில் கடந்த சில நாள்களாக மழை பெய்ததால், அணையில் இருந்து தண்ணீர் திறப்பது குறைக்கப்பட்டது.

இதனால், மேட்டூர் அணையின் நீர்மட்டமும் 109.48 அடியில் இருந்து திங்கள்கிழமை மாலை 110.85 அடியாக உயர்ந்தது. இந்த நிலையில் அணைக்கான நீர் வரத்து திங்கள்கிழமை நொடிக்கு 11,835 கன அடியாக இருந்தது. இது செவ்வாய்க்கிழமை காலை 8 மணியளவில் நொடிக்கு 14,855 கன அடியாக உயர்ந்தது. மாலையில் இது மேலும் அதிகரித்து நொடிக்கு 23,815 கன அடியாக உயர்ந்தது.

அணையில் இருந்து நொடிக்கு 4,708 கன அடி தண்ணீர் வெளியேற்றப்பட்டது. வெளியேற்றம் குறைந்துள்ள நிலையில், வரத்து அதிகரித்திருப்பதால் கடந்த இரண்டு நாள்களில் அணையின் நீர்மட்டம் சுமார் ஒரு அடி உயர்ந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## செப். 15-ல் திருச்சியில் அனைத்து விவசாய சங்கங்களின் கூட்டம்

காவிரியில் 3 நீர்மின் நிலையங்களை அமைக்கவுள்ளதாக கர்நாடக மாநில அமைச்சர் தெரிவித்துள்ளதை அடுத்து, திருச்சி இனாம்புலியூரில் வரும் செப். 15 ஆம் தேதி அனைத்து விவசாய அமைப்புகளின் கூட்டுக்கூட்டம் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் ஆர். நல்லகண்ணு பங்கேற்கவுள்ளார்.

இத்தகவலை காங்கிரஸ் விவசாய அணியின் மாநிலத் துணைத் தலைவர் புலியூர் நாகராஜன் தெரிவித்தார். இதுதொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில், தொடர்ந்து கர்நாடக அரசு இதுபோன்ற நடவடிக்கையில் ஈடுபட்டு வரும் நிலையில், இப்போதாவது அனைத்து அரசியல் கட்சிகளும் ஓரணியில் சேர வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சட்டரீதியாக வரும் பிரச்னைகளை சந்திப்போம் என்றும் கர்நாடக அமைச்சர் தெரிவித்திருப்பதற்கு கண்டனம் தெரிவத்துள்ளதுடன், காவிரி டெல்டா பாசன விவசாயிகளின் வாழ்வாதாரத்தை அழிக்கும் இந்தத் திட்டத்துக்கு மத்திய அரசு அனுமதி வழங்கக் கூடாது என்றும் புலியூர் நாகராஜன் கேட்டுக் கொண்டுள்ளார்.

## விலையில்லா ஆடுகள் பெற அழைப்பு

அரியலூர் மாவட்டத்தில் விலையில்லா வெள்ளாடுகள்,செம்மறி ஆடுகள் பெற விண்ணப்பிக்கலாம்.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் எ. சரவணவேல்ராஜ் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தமிழக முதல்வர் நிலமற்ற ஏழை விவசாய கூலித் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் பொருட்டு விலையில்லா வெள்ளாடு, செம்மறியாடு வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறார்.

அதன்படி இலவச ஆடு வழங்க அரியலூர் மாவட்டத்தில் ஜயங்கொண்டம் ஊராட்சி ஒன்றியம் பாப்பாக்குடி ஊராட்சியில் 23 பேர், செந்துறை ஊராட்சி ஒன்றியம் நல்லாம்பாளையம் ஊராட்சியில் 27 பேர், அரியலூர் ஊராட்சி ஒன்றியம், பெரியநாகலூர் ஊராட்சியில் 63 பேர், திருமானூர் ஊராட்சி ஒன்றியம் குருவாடி ஊராட்சியில் 55 பேர் தேர்வு செய்யப்பட உள்ளனர்.

இதற்காக அந்தந்த ஊராட்சிகளில் ஊராட்சித் தலைவர் தலைமைகளில் வியாழக்கிழமை (செப்.12) காலை 11 மணிக்கு சிறப்பு கிராம சபைக் கூட்டம் நடைபெற உள்ளது.

இதில் பயன் பெற விரும்புவோர் பாஸ்போர்ட் அளவு புகைப்படத்துடன், குடும்ப அட்டை, நிலமில்லாச் சான்று, அரசுத் திட்டத்தில் இதுவரை எந்தச் சலுகையும் பெறவில்லை என்ற

சான்றுடன் விண்ணப்பத்தைக் கொடுக்க வேண்டும். தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளின் பட்டியல் செப்.18 -ல் இறுதி செய்யப்பட்டு, அவர்களின் பட்டியலுக்கு செப்.20-ல் நடைபெறும் கிராம சபைக் கூட்டத்தில் ஒப்புதல் பெறப்படும்.

## மேட்டூர் அணையின் நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை மாலை 110.69 அடியாக இருந்தது.

மேட்டூர் அணையின் நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை மாலை 110.69 அடியாக இருந்தது. அணைக்கு நொடிக்கு 23,815 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து நொடிக்கு 4,003 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து நொடிக்கு காவிரியில் 101 கன அடி வீதமும், வெண்ணாற்றில் 2,000 கன அடி வீதமும், கல்லணைக் கால்வாயில் 2,513 கன அடி வீதமும் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கொள்ளிடத்தில் தண்ணீர் திறக்கப்படவில்

## வேளாண் கல்லூரி மாணவிகள் களப்பணி

வேதாரண்யம் பகுதி கிராமங்களில் காரைக்கால் ஜவாஹர்லால் நேரு வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவன மாணவிகள் முகாமிட்டு, இயற்கை முறையில் விவசாயம் குறித்த ஒரு மாதகால விழிப்புணர்வு களப்பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

செட்டிப்புலம் கிராமத்தில் திங்கள்கிழமை முகாமிட்ட கல்லூரி மாணவிகள் 6 பேர் ஊரகவேளாண் பணி குறித்து ஆய்வு செய்தனர்.

அப்போது, அங்குள்ள விவசாயிகள் மற்றும் மகளிர் குழு உறுப்பினர்களிடையே இயற்கை உர பயன்பாட்டின் அவசியம், உர மேலாண்மை, இயற்கை முறையில் பூச்சிக்கட்டுப்பாடு ஆகிய முறைகள் குறித்து செயல்விளக்கம் செய்து காட்டினர்.

இதேபோல், கரியாப்பட்டினம் கிராமத்தில் நிலக்கடலை சாகுபடியில் மகசூலை அதிகரிக்கவும், பயிர் வறட்சியை தாங்கி வளரவும் உதவும் மெத்திலோபாக்டீரியாவின் அவசியம் மற்றும் அதை பயன்படுத்தும் முறைகள் குறித்து செயல்விளக்கங்கள் செய்து காட்டினர். இயற்கை முறை முன்னோடி விவசாயி பாலசுப்பிரமணியன், மகளிர் குழு முன்னோடி விவசாயிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

விழிப்புணர்வு செயல்விளக்கப் பணிகளில் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய மாணவிகள் சி. சிவரஞ்சனி, கே. சோதிமணி, என். செல்வராஜேஸ்வரி, பி. சௌமியா, கே. ராஜலெட்சுமி, ஜி. ரோஸ்லின் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## தோட்டக்கலைப் பயிர் சாகுபடி பயிற்சி

பெரம்பலூர் மாவட்டம், வாலிகண்டபுரத்தில் உள்ள ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத்தில், தோட்டக்கலை துறை, ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையம், தோட்டக்கலை, மலைப்பயிர்கள் துறை தேசிய தோட்டக்கலை இயக்கம் சார்பில் விவசாயிகளுக்கு தோட்டக்கலை பயிர்களின் சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்த 4 நாள் பயிற்சி முகாம் செவ்வாய்க்கிழமை தொடங்கியது.

முகாமைத் தொடங்கி வைத்த பெரம்பலூர் மாவட்ட வேளாண் இணை இயக்குநர் ப. சங்கரலிங்கம் பேசியது:

சின்ன வெங்காயம், தக்காளி, வெண்டை, குண்டுமல்லி, சம்பங்கி, செண்டு மல்லி, மஞ்சள் சாகுபடி மற்றும் நுண்ணீர்ப் பாசனம், அடர் நடவு முறை, காய்கறிகளைப் பதப்படுத்தும் தொழில்நுட்பங்கள் குறித்து இதில் பயிற்சியளிக்கப்பட உள்ளது.

இதில் பயிற்சி பெறும் விவசாயிகள் நவீன தொழில் நுட்பங்களைத் தெரிந்துகொண்டு, தோட்டக்கலைப் பயிர்களை அதிகளவு சாகுபடி செய்ய வேண்டும். மேலும், வேளாண் துறை, தோட்டக்கலை துறையில் உள்ள சிறப்புத் திட்டங்களை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார் அவர்.

தொடர்ந்து, தோட்டக்கலை பயிர்களைத் தாக்கும் நோய்கள், அவற்றைக் கட்டுப்படுத்தும் முறை குறித்து வேளாண் அறிவியல் மைய மனையியல் தொழில்நுட்ப வல்லுநர் ப. விஜயலட்சுமி, மலர்ச் சாகுபடியில் மேம்பட்ட தொழில் நுட்பங்கள் குறித்து அரியலூர் மாவட்ட வேளாண் அறிவியல் மைய தோட்டக்கலைத் தொழில்நுட்ப வல்லுநர் ராஜா ஜோஸ்லின் ஆகியோர் விளக்கினர்.

பயிற்சியில் ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்) கனகசபை, தோட்டக் கலைத் துறை துணை இயக்குநர் இந்திரா, 100-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத் திட்ட ஒருங்கிணைப்பாளர் ஜெ. கதிரவன் வரவேற்றார்.

## விளாத்திகுளம் பகுதியில் வேளாண் தொழில்நுட்ப வாகன பிரசாரம்

விளாத்திகுளம் வட்டத்தில் வேளாண்மைத் துறை சார்பில், நீர்வள, நிலவளத் திட்டத்தின் கீழ் வாகன பிரசாரம் மூலமாக விவசாயிகளுக்கு வேளாண் தொழில்நுட்பங்கள் குறித்து விளக்கப்பட்டது.

வைப்பாறு உப வடிநிலப் பகுதிகளான படர்ந்தபுளி, அருங்குளம், விளாத்திகுளம், மேல்மாந்தை, தத்தனேரி ஆகிய பகுதிகளில் வேளாண்மைத் துறை அலுவலர்கள் மற்றும் களப் பணியாளர்கள் விவசாயக் குழுக்களைச் சந்தித்தனர். அவர்களுக்கு மானாவாரி பயிரான மக்காசோளம் சாகுபடி, ஐசோபாம் மக்காசோளம் பெருக்கத் திட்டம், பயறுவகைப் பயிர்களுக்கு இலை வழியாக உரமிடுதல், மண் மாதிரி மற்றும் நீர் மாதிரிகள் சேகரிக்கும் முறை, களை மேலாண்மை, பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகள்,விதைநேர்த்தி செய்யும் தன்மைகள், விவசாயத்துக்கு அரசு வழங்கும் திட்டங்கள், மானியங்கள், நவீன தொழில்நுட்பங்கள் குறித்து விளக்கினர். விவசாயிகளுக்கு வேளாண் தொழில்நுட்ப உத்திகள் குறித்து இலவசக் கையேடு வழங்கப்பட்டது.

இந்தப் பிரசாரத்தில் விளாத்திகுளம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் சாந்திராணி, வேளாண் அலுவலர் செல்வமாலதி, உதவி அலுவலர்கள் மகேந்திரகுமார், கண்ணன், ரமணாமூர்த்தி, களப் பணியாளர்கள் சுதாகர், கவுதமி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

தினமலர்

நிறுவனர்: டி.வி.ராமசுப்பையர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**11.09.2013**

## செடி முருங்கை சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம்

மயிலம்: மயிலம் பகுதியில் செடி முருங்கை சகுபடி செய்ய விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.மயிலம் பகுதியில் விவ சாயிகள் செடி முருங்கை சாகுபடி செய்து வருகின்றனர். நிலத்தை நன்கு பதப்படுத்தி தொழு உரம் அடித்த பின்னர் 8 அடிக்கு ஒரு செடி வீதம் நட்டு பராமரித்து வருகின் றனர். இந்த செடி முருங்கைக்கு அதிகம் தண்ணீர் பாய்ச்ச தேவையில்லை. அதிகம் பூச்சிகள் தாக்குவதில்லை. செடிகள் நடவு செய்திலிருந்து 6 மாதத்திற்கு பின் காய்க்க துவங்குகிறது. நல்ல வடிகால் நிலமாக இருந்தால் இயற்கை முறையில் சாகுபடி செய்தால் 3 ஆண்டுகள் வரையில் மகசூல் தரும், செயற்கை உரங்களை பயன்படுத்தினால் 2 ஆண்டுகள் தான் செடி மகசூல் கொடுக்கும். நன்கு விளைந்த காய்களை விவசாயிகள் சென்னை கோயம்பேடு, புதுச்சேரிக்குவிற்பனைக்கு அனுப்புகின்றனர்.

## விதை கிராம பயிற்சி

திருச்செங்கோடு: திருச்செங்கோடு வட்டார விதை கிராம திட்டத்தில், விவசாயிகளுக்கு பயறு விதை உற்பத்தி குறித்த, விதை கிராம திட்ட பயிற்சி முகாம் நடத்தது. வேளாண் உதவி இயக்குனர் நமச்சிவாயம் தலைமை வகித்தார். வேளாண் துணை இயக்குனர் (மாநில திட்டம்) முரளிதரன், விதை கிராம திட்டத்தின் முக்கியத்துவம், அரசின் சலுகைகள், வாய்ப்புகள் குறித்து விளக்கினார். மாவட்ட வேளாண் இணை இயக்குனர் ராஜேந்திரன், துணை வேளாண் அலுவலர் சங்கரன், அலுவலர்கள், விவசாயிகள் உள்பட பலர் பங்கேற்றனர்.

## திருந்திய நெல் சாகுபடி 450 ஹெக்டேர் இலக்கு

நாமக்கல்: கபிலர்மலை வட்டாரத்தில், 450 ஹெக்டேர் பரப்பளவில், திருந்திய நெல் சாகுபடி திட்டம் செயல்படுத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நாமக்கல் அடுத்த, கபிலர்மலை வட்டாரத்தில், திருந்திய நெல் சாகுபடி திட்டம் பிரபலப்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த சில ஆண்டுகளாக, பருவமழை பொய்த்ததால், நெல் பயிரிடுவது குறைந்து இருந்தது. நடப்பாண்டில், ஓரளவு மழை பெய்து வருவதால், நெல் சாகுபடிக்கான நாற்று நடவு பணிகளை, விவசாயிகள் மேற்கொண்டுள்ளனர். இந்த வட்டாரத்தில், திருந்திய நெல் சாகுபடி செய்வது தொடர்பாக, 12 வகையான தொழில் நுட்பங்களை, வேளாண் அதிகாரிகள் விவசாயிகளிடம் கூறிவருகின்றனர். அக்டோபர் முதல் வாரத்தில் இருந்து, நாற்று நடவு பணிகள் துவங்கும்.வேளாண் உதவி இயக்குனர் தங்கராஜ் கூறியதாவது: கபிலர்மலை வட்டாரத்தில், நடப்பாண்டு, 1,250 ஹெக்டேர் அளவிற்கு நெல் சாகுபடி இருக்கும் என எதிர்பார்க்கிறோம். அதில், திருந்தி நெல் சாகுபடியில், 450 ஹெக்டேருக்கு சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டில், 270 ஹெக்டேருக்கு திருந்திய நெல் சாகுபடி செய்யப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. இதுதொடர்பாக மேலும் விபரங்களுக்கு, அருகில் உள்ள வேளாண் விரிவாக்க மையத்தை அணுகவும்.இவ்வாறு அவர் கூறினார்.

## கால்நடைகளுக்கு கோமாரி நோய் அறிகுறி : குளிர்ந்த சீதோஷ்ண நிலையால் பரவல்

ஈரோடு: காலநிலை மாற்றத்தால், மாவட்டத்தில் பரவலாக கால்நடைகளுக்கு கோமாரி நோய் ஏற்பட்டு வருகிறது. இதனால் கால்நடை வளர்ப்போர் கலக்கம் அடைந்துள்ளனர். மாவட்டத்தில் உள்நாட்டு, அயலின பசுக்கள் மட்டுமின்றி எருமைகள், வெள்ளாடு, செம்மறியாடுகளை கால்நடை வளர்ப்போர் அதிகளவில் உள்ளனர். இதனால், ஆவின் நிறுவனத்துக்கு மட்டும் தினமும், 2.50 லட்சம் லிட்டர் பால் வழங்கப்படுகிறது. த விர தனியார் பண்ணைகளுக்கு பல லட்சம் லிட்டர் பாலும், வீடு, கடைகளு க்கு பல லட்சம் லிட்டரும் சப்ளை செய்யப்படுகிறது. கடந்த ஜூன் முதல் அவ்வப்போதும், ஆகஸ்ட் மாதம் துவங்கி பெரும்பாலான நாட்களிலும் மழை பெய்து வருகிறது. ஆகஸ்ட் மாதத்துக்கு முன்புவரை வறட்சி நிலவிய சூழல் மாறி, தற்போது பசுமை பிடித்துள்ளது. இதனால், கால்நடைகளுக்கு எளிதில் தீவனங்கள் கிடைக்கும் என்ற நம்பிக்கையில், கால்நடைகளை வாங்கி வருகின்றனர். அதேநேரம், சில இடங்களை தவிர்த்து, பெரும்பாலான பகுதிகளிலும் கன மழை பெய்யாமல், அவ்வப்போது பரவலாக விட்டு, விட்டு மழை பெய்து வருகிறது. மழை குறைந்தாலும், மேகமூட்டமாக, வெயில் இன்றி, சீதோஷ்ண நிலையில் பெரும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. காலை, மாலை மற்றும் இரவு நேரங்களில் குளிர்ந்த காலநிலை நிலவுகிறது. பகல் நேரத்தில் மட்டும் அதிக வெப்பத்தை உணர முடிகிறது. மாறி வரும் சீதோஷ்ண நிலையால், கா ல்நடைகள் கோமாரி நே ாயால் பாதிக்க துவங்கியுள்ளது. பரவலாக மாவட்டத்தின் அனைத்து பகுதிகளிலும், கோமாரி நோய் தாக்குதல் அறிகுறிகளுடன் கா ல்நடை மருத்துவமனை க்கு, கால்நடை வளர்ப்போ ர் தங்கள் கால்நடைகளை சிகிச்சைக்கு கொண்டு வந்த வண்ணம் உள்ளனர். வாயில் புண், மடி வீங்குதல் போன்றவை கோமாரி நோய்க்கான அறிகுறிகள். நோயால் பாதிக்கப்பட்டிருக்கும் நேரத்தில் மடியை தொட விடாது. வாய் புண் காரணமாக தீவனங்களை உட்கொள்ளாது. உடலில் நீர் சத்து நாளுக்கு நாள் குறையும். உரிய நேரத்தில் சிகிச்சை அளிக்காவிடில் மரணம் கூட நிகழ வாய்ப்புள்ளது. கோமாரி நோயின் அறிகுறிகள் குறித்து அறியாததால் கால்நடை வளர்ப்போர் நோய் தீவிரமடையும் வரை கவனிப்பதில்லை. எனவே அவர்களுக்கு பெருத்த நஷ்டம் ஏற்படுகிறது. நோய் வருவதற்கு

முன்னரே, கோமாரி நோய் தடுப்பூசியை கால்நடைகளுக்கு போட வேண்டும். தடுப்பூசியை முறையாக போட்டால் நோய் பாதிப்பில் இருந்து கால்நடைகளை காப்பாற்றலாம். இதுகுறித்து கால்நடை மருத்துவ பல்கலைக்கழக ஆராய்ச்சி நிலைய உதவி பேராசிரியர் கிருபாகரன் கூறியதாவது: குளிர்ச்சியான சீதோஷ்ண நிலையால் கால்நடைகளுக்கு கோமாரி நோய் பரவ வாய்ப்புகள் உள்ளது. எனவே கால்நடை பராமரிப்பு துறை சார்பில் நடத்தப்படும் கோமாரி நோய் தடுப்பூசி முகாம்களில் பங்கேற்று கால்நடைகளுக்கு தடுப்பூசி போட்டு கொள்ள வேண்டும். கால்நடைகளின் அறிகுறிகளை கண்டறிந்து, உரிய சிகிச்சை வழங்கி வேண்டும், என கேட்டு கொண்டார்.

## சம்பா சாகுபடிக்கு இடுபொருட்கள் கையிருப்பு வேளாண்மைத்துறை அமைச்சர் தகவல்

தஞ்சாவூர்: "தஞ்சாவூர் மாவட்டத்தில் சம்பா சாகுபடிக்குத் தேவையான இடுபொருட்கள் கையிருப்பு வைக்கப்பட்டுள்ளது," என, வேளாண்மைத்துறை அமைச்சர் தாமோதரன் தெரிவித்தார். தஞ்சாவூர் கலெக்டர் அலுவலகத்தில் சம்பா சாகுபடி முன்னேற்பாடு குறித்து விவசாயிகளுடனான கலந்தாய்வு கூட்டத்தில் அவர் பேசியதாவது: தஞ்சாவூர் மாவட்டத்தில் இந்தாண்டில் 28 ஆயிரத்து, 294 ஹெக்டேர் பரப்பளவில் குறுவை சாகுபடியும், 3,320 ஹெக்டேரில் சம்பா சாகுபடியும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. சம்பா பருவத்துக்குத் தேவையான விதைகள் 691 டன்கள் வேளாண் விரிவாக்க மையங்கம் மூலமாகவும், 470 டன்கள் கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலமாகவும், 1,885 டன்கள் தனியார் கடைகள் மூலமாகவும் என மொத்தம் 3,046 டன்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. சம்பா பருவத்துக்கு தேவையான உரங்களான யூரியா 6,980 டன்களும், டி.ஏ.பி., 6,239 டன்களும், பொட்டாஷ் 1,929 டன்களும், கலப்பு உரம் 1,414 டன்களும் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. விவசாயிகளின் கோரிக்கைக்கு ஏற்ப தேவையான வேளாண் கருவிகள் இந்தாண்டிலேயே வழங்கப்படும். இங்கு விவசாயிகள் தெரிவித்த கோரிக்கைகள் அனைத்தும் தமிழக முதல்வரின் கவனத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு நல்ல தீர்வு காணப்படும். இவ்வாறு அமைச்சர் தாமோதரன் பேசினார். தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் சாமி.நடராஜன் பேசுகையில், ""விவசாயிகளுக்கு தேவையான விதை நெல் தற்போது 17

சதம் வரைதான் அரசு வழங்கி வருகிறது. இதை 25 சதவீதமாக உயர்த்த வேண்டும். பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் வகையில் 80 முதல் 90 நாள்கள் வயதுடைய நெல் ரகங்களை கண்டுபிடித்து அறிமுகப்படுத்த வேண்டும்," என்றார். ராயமுண்டான்பட்டி ஜீவகுமார் பேசுகையில், ""விதை நெல் கட்டுபாடு கடுமையாக இருக்கிறது. பெரும்பாலான விவசாயிகள் நோய் எதிர்ப்பு தியுடைய சி.ஆர் 1009, கோ.ஆர்.50, ஆடுதுறை 46 ஆகிய விதைநெல் ரகங்களை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அனைத்து வணிக வங்கிகளிலும் பயிர்க்கடன் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்," என்றார். அரசு முதன்மை செயலரும், வேளாண் உற்பத்தி ஆணையருமான சந்தீப் சேனா, வேளாண்மைத்துறை இயக்குனர் ராஜேந்திரன், கலெக்டர் பாஸ்கரன், எம்.எல்.ஏ.,க்கள் ரெங்கசாமி, ரெத்தினசாமி, துரைக்கண்ணு உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### கரூர் மாவட்டத்தில் நான்காண்டாக மழை குறைந்தது :வடகிழக்கு பருவமழையை எதிர்பார்க்கும் விவசாயிகள்.

கரூர்: கரூர் மாவட்டத்தில் கடந்த நான்கு ஆண்டுகளாக சராசரி மழை அளவு படிப்படியாக குறைந்து வருகிறது. நடப்பாண்டு தென்மேற்கு பருவமழை எதிர்பார்த்த அளவு பெய்யாததால், வடகிழக்கு பருவமழையை கரூர் மாவட்ட விவசாயிகள் எதிர்பார்த்து காத்திருக்கின்றனர். கரூர் மாவட்டத்தில் ஆண்டுதோறும் ஜனவரி மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை 652.20 மி.மீ., மழை சராசரியாக பெய்ய வேண்டும். இதில், ஜனவரி மாதம் முதல் மே மாதம் வரை கோடைக்காலத்தில் 127 மி.மீ., மழையும், ஜூன் மாதம் முதல் செப்டம்பர் மாதம் வரை தென்மேற்கு பருவமழையின் போது, 238 மி.மீ., மழையும், அக்டோபர் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை வடகிழக்கு பருவமழையின் போது, 287.20 மி.மீ., மழையும் பெய்ய வேண்டும். ஆனால், கரூர் மாவட்டத்தில் கடந்த ஜனவரி மாதம் முதல் ஜூலை மாதம் வரை 96.85 மி.மீ., மழைதான் பெய்துள்ளது. செப்டம்பர் மாதம் முடிய இன்னும் 20 நாட்கள் உள்ள நிலையில், கரூர் மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழை எதிர்பார்த்த அளவில் பெய்யவில்லை. கடந்த ஜனவரி முதல் தற்போது, மாதந்தோறும் பெய்ய வேண்டிய சராசரி மழையளவு கூட, கரூர் மாவட்டத்தில் பெய்யவில்லை. ஆண்டுதோறும் மே மாத இறுதியில் தென்மேற்கு பருவமழை தொடங்கும்

காலமாகும். ஆனால், நடப்பாண்டு மே மாதம் முதல் தென்மேற்கு பருவமழை எதிர்பார்த்த அளவில் பெய்யவில்லை. இதனால், மானாவரி நிலங்களில் விவசாயம் செய்ய காத்திருந்த விவசாயிகள் பெரும் ஏமாற்றம் அடைந்தனர். கடந்த 2010 மற்றும் 2011 ம் ஆண்டுகளில் சராசரி மழையளவை விட அதிகமாக கரூர் மாவட்டத்தில் மழை பெய்தது. ஆனால், கடந்தாண்டு சராசரி மழையளவை விட குறைவாக மழை பெய்தது. குறிப்பாக, கடந்த 2012 ம் ஆண்டில் சராசரி மழையளவான 652.20 மி.மீ., மழைக்கு பதிலாக, 125.64 மி.மீ., மழை குறைவாக 527.66 மி.மீ., மழைதான் பெய்தது. இதனால், கடந்தாண்டு மானாவாரி பயிர்கள் சாகுபடி வெகுவாக பாதிக்கப்பட்டது. கடந்த நான்கு ஆண்டுகளில் கரூர் மாவட்டத்தில் பெய்து வரும் சராசரி மழையளவு படிப்படியாக குறைந்து வருகிறது. கடந்த 2010 ம் ஆண்டு சராசரி மழையளவு 857.47 மி. மீ., இருந்தது. 2011 ம் ஆண்டு 723.62 மி. மீ., இருந்த மழையளவு, கடந்த 2012 ம் ஆண்டு 527. 66 மி.மீட்டராக குறைந்து விட்டது. நடப்பாண்டும், கரூர் மாவட்டத்தில், கடந்த எட்டு மாதங்களில் எதிர்பார்க்கப்பட்ட சராசரி மழையளவு இன்னும் பெய்யவில்லை. கரூர் மாவட்டத்தில் காவிரியாறு மற்றும் அமராவதி ஆற்றுப்பகுதிகளை தவிர்த்து மானாவாரி நிலங்களை நம்பி, ஆயிரக்கணக்கான விவசாயிகள் அதிகளவில் எண்ணை வித்து பயிர்களை சாகுபடி செய்து வருகின்றனர். நடப்பாண்டு சராசரி மழை யளவை விட குறைவாக மழை பெய்துள்ளதால், நிலத்தடி நீர் அதிகரிக்கும் வாய்ப்பு குறைவாக உள்ளது. இதனால், கரூர் மாவட்டத்தில் மானாவாரி நிலங்களை நம்பியுள்ள விவசாயிகள், அடுத்த மாதம் துவங்கவுள்ள வடகிழக்கு பருவமழையை எதிர்பார்த்து காத்திருக்கின்றனர்.

காவிரி, அமராவதி கைகொடுத்தது!

கரூர் மாவட்டத்தில் கடந்த நான்கு ஆண்டுகளாக சராசரி மழையளவு குறைந்து வரும் நிலையில், நடப்பாண்டும் எதிர்பார்த்த மழை பெய்யவில்லை. ஆனால், காவிரி நீர்ப் பிடிப்பு மற்றும் அமராவதி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பலத்த மழை பெய்தததால், மேட்டூர் அணை, அமராவதி அணைகளுக்கு கூடுதல் தண்ணீர் வந்தது. இரண்டு அணைகளுக்கு அதிகளவில் தண்ணீர் வந்தததால், காவிரியாற்றில் இருந்து டெல்டா சாகுபடிக்கும்,

அமராவதி அணையில் இருந்து கரூர் மாவட்ட பாசனத்துக்கும், தாமதமாக தண்ணீர் திறக்கப் பட்டாலும், விவசாயிகள் சாகுபடி பணியை ஓரளவுக்கு துவங்கியுள்ளனர்.

## ஒரு ஏக்கருக்கு 20 டன் நெல் மகசூல்திருவாரூர் கலெக்டர் வேண்டுகோள்

திருத்துறைப்பூண்டி: திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி அருகேயுள்ள சிங்களாந்தி கிராமத்தில் நேரடி நெல் விதைப்பு மேற்கொண்ட விவசாயிகளுக்கு மானியத்தில் களைக்கொல்லி வழங்கும் விழா நடந்தது.

இதில், கலெக்டர் நடராசன் தலைமை வகித்தார். வேளாண் துணை இயக்குனர் மயில்வாகனன் முன்னிலை வகித்தார். தொடர்ந்து, கலெக்டர் நடராசன் தலைமை வகித்து பேசியதாவது: திருத்துறைப்பூண்டியில் இருந்து தொண்டியக்காடு வரை விவசாயிகள் நலனுக்கான பல்வேறு நலத்திட்டங்கள் அரசு சார்பில் செயல்படுத்தப்படுகிறது. திருவாரூர் மாவட்டத்தில் நேரடி நெல் விதைப்பு செய்த விவசாயிகள், ஏக்கருக்கு 300 ரூபாய் மானியத்தில் களைக்கொல்லி மருந்தை வேளாண்மைத்துறை மூலம் பெறலாம். இதனால், இரண்டு மடங்கு உற்பத்தியை பெருக்கி, 3 மடங்கு லாபத்தை விவசாயிகள் பெற வேண்டும். இத்தகைய இலக்கை நிறைவேற்ற மாவட்ட நிர்வாகம் சார்பில் பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. இத்தகைய உதவிகளை விவசாயிகள் பயன்படுத்தி கொண்டு, ஏக்கருக்கு 20 டன் நெல் மகசூல் பெற வேண்டும்.இவ்வாறு, அவர் பேசினார்.இதற்கான ஏற்பாடுகளை வேளாண்மைத்துறை அதிகாரிகள், அலுவலர்கள் செய்திருந்தனர்.

## தேங்காய் விலை கடும்... உயர்வு வறட்சியால் தென்னை மரங்கள் காய்ந்ததால்

குஜிலியம்பாறை:கடும் வறட்சி காரணமாக, ஏராளமான தென்னை மரங்கள் காய்ந்து போனதால், தேங்காய் விலை கடுமையாக உயர்ந்துள்ளது.

தொடர்ந்து இரண்டு ஆண்டாக போதிய மழை இல்லாததால், கடும் வறட்சி நிலவியது. விவசாயம் பொய்த்துப்போன நிலையில், தோட்டங்களில் இருந்த தென்னை மரங்களும் தொடர்ச்சியாக காய்ந்தன. இவற்றை விவசாயிகளால் வேதனையுடன் பார்க்க முடிந்ததே தவிர, காப்பாற்ற முடியவில்லை. வறட்சி காரணமாக, தென்னை மரங்கள் காய்ந்து முறிந்தன. மரங்கள் காய்ந்ததால், தேங்காய் விலை கிடு, கிடுவென உயர்ந்துள்ளது. கடந்த ஆண்டு, ஒரு தேங்காய் ரூ.3 முதல் 6 வரை விற்றது. தற்போது, ஒரு தேங்காய் ரூ.8 முதல், 10, 12 வரை விற்கிறது. தென்னை, மா மரங்கள் காயும் அளவிற்கு வறட்சி

ஏற்பட்டதால், இவற்றை வளர்க்கவே விவசாயிகள் அச்சப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. தென்னை மரங்கள் காய்ந்ததால், தேங்காய் வரத்து மேலும் குறையும் நிலையில், தேங்காய் விலை மேலும் அதிகரிக்கும் வாய்ப்புள்ளது. வறட்சியால் காய்ந்த மரங்கள் குறித்து வருவாய்த்துறையினர், தற்போது கணக்கு எடுத்து வருகின்றனர் என்பது மட்டுமே விவசாயிகளுக்கு ஆறுதலாக உள்ளது. எஸ்.முருகானந்தம், வியாபாரி, பொன்னகரம், திண்டுக்கல்: கடந்த ஒரு வாரத்தில், தேங்காய் விலை உயர்ந்துள்ளது. ரூ.2.50க்கு விற்ற சிறிய தேங்காய், ரூ.7க்கு விற்கப்படுகிறது. ரூ.6க்கு விற்ற பெரிய தேங்காய் ரூ.14க்கு விற்கப்படுகிறது. வரத்து குறைவால், இந்த விலை உயர்வு ஏற்பட்டுள்ளது. இதனால், தேங்காயின் விற்பனையும், குறைந்துள்ளது. ஜி.நாகரத்தினம், அரசு ஊழியர், மல்லிகை நகர், திண்டுக்கல்: சமையலில் அதிக அளவு தேங்காயை பயன்படுத்துகிறோம். விலை உய ர்வால், தேங்காய் செலவும், அதிகரித்துள்ளது. இதனால், தேங்காயின் பயன்பாட்டை குறைத்துவிட்டோம்.

## திராட்சை விவசாயிகள் ஆலோசனைக் கூட்டம்

கம்பம்:திராட்சை விவசாயிகள், உரம் மற்றும் பூச்சி மருந்து கம்பெனிகளின் பிரதிநிதிகள் பங்கேற்ற ஆலோசனை கூட்டம் கம்பத்தில் நடந்தது.

கம்பம் பள்ளத்தாக்கு விவசாயிகள் கூட்டமைப்பு நிர்வாகிகள் மற்றும் திராட்சை விவசாயிகள் ஆலோசனை கூட்டம் நடந்தது. ஆண்டிபட்டி எம்.எல்.ஏ., தங்கதமிழ்செல்வன் தலைமை வகித்தார். கூட்டமைப்பு தலைவர் செல்வக்குமார் முன்னிலை வகித்தார். பொருளாளர் இருளாண்டி வரவேற்றார். திராட்சை விவசாயிகள் சார்பில், நடத்தப்படும் உரம் பூச்சி மருந்து கடையில்,தரமான உரம் மற்றும் பூச்சி மருந்துகள் லாபத்தை குறைத்து விற்பனை செய்கின்றனர். மாவட்டம் முழுவதும் விவசாயிகளுக்கு விலை குறைவாக உரம் மற்றும் பூச்சி மருந்துகள் கிடைக்கிறது. திராட்சை ஆராய்ச்சி நிலையம் செயல்படத் துவங்கியுள்ளதாகவும், விவசாயிகளுக்கு தேவைப்படும் நவீன தொழில்நுட்பங்கள், புதிய ரகங்களின் சாகுபடி முறைகளை அந்த மையத்தில் உள்ள பேராசிரியர்கள் விளக்குவார்கள். விரைவில் இந்த

ஆராய்ச்சி நிலையத்தின் துவக்க விழா நடைபெறும்,என எம்.எல்.ஏ., தங்க தமிழ்ச்செல்வன் பேசினார்.

## தேங்காய் விலை விர்..விர்.. இதுவரை இல்லாத விலை உயர்வால் மக்கள் அதிர்ச்சி

தூத்துக்குடி : தூத்துக்குடியில் ஓணம் பண்டிகையை ஒட்டி தேங்காய் விலை மிக கடுமையாக உயர்ந்துள்ளது. ஒரு காய் விலை 3 ரூபாய் முதல் 6 ரூபாய் வரை விலை உயர்ந்துள்ளது. வெங்காயம் உள்ளிட்ட காய்கறி விலையும் அதிகரித்துள்ளது. தூத்துக்குடியில் எந்த ஆண்டும் இல்லாத வகையில் தற்போது தேங்காய் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. சாதாரணமாக 6 ரூபாயிற்கு தேங்காய் கிடைத்தது. ஆனால் இன்றைக்கு மிக, மிக சிறிய தேங்காய் 11 ரூபாயிற்கு விற்கப்படுகிறது. சிறிய தேங்காயில் ஒரு தேங்காயிற்கு 3 ரூபாயும், நடுத்தர தேங்காய் ஒன்றுக்கு 6 ரூபாயும், பெரிய சைஸ் தேங்காய் 8 ரூபாயும் விலை அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டில் இதே நேரத்தில் தேங்காய் விலை மிகவும் வீழ்ச்சியடைந்திருந்தது. இந்த விலை உயர்வு குறித்து தூத்துக்குடி காய்கறி மார்கெட் மொத்த தேங்காய் வியாபாரி வல்லவன் கூறுகையில், தேங்காய் வரத்து எப்போதும் போல் இருக்கிறது. ஓணம் பண்டிகை காரணமாக தேங்காய் விலை மிக அதிகமாக உயர்ந்துள்ளது. கடந்த ஓணத்திற்கு கூட இந்த அளவிற்கு விலை அதிகரிக்கவில்லை. தற்போது விற்பனை செய்யக் கூடிய விலை எந்த ஆண்டிலும் இந்த அளவிற்கு இல்லை. அந்த அளவிற்கு விலை அதிகரித்துள்ளது. ஓணம் பண்டிகை முடியும் போது விலை குறைய வாய்ப்பு இருப்பதாக கூறப்படுகிறது. விலை உயர்ந்தாலும் விற்பனை எப்போதும் போல் தான் இருக்கிறது. தேங்காய் வரத்தும் எப்போதும் போல் தான் உள்ளது என்றார். தூத்துக்குடியில் ஏற்கனவே மளிகை சாமான்கள் விலை மாதத்திற்கு மாதம் அதிகரித்து வருகிறது. அரிசியும் 25 கிலோ மூடைக்கு மாதத்திற்கு மாதம் 20 ரூபாய் முதல் 30 ரூபாய் வரை அதிகரித்து விடுகிறது. ஒட்டு மொத்தமாக எல்லா பொருட்களின் விலையும் உயர்ந்து வருவதால் நடுத்தர மக்கள் கடுமையான சங்கடத்திற்கு ஆளாகும் நிலை ஏற்பட்டிருக்கிறது. மார்கெட்டில் நேற்று உள்ளி ஒரு கிலோ 60 ரூபாயிற்கும், பல்லாரி 50 ரூபாயிற்கும் விற்பனை செய்யப்பட்டது. நாட்டு தக்காளி இரண்டு கிலோ 15 ரூபாயிற்கும், உருளை கிழங்கு கிலோ 20 ரூபாயிற்கும் விற்பனை செய்யப்பட்டது. ஓணம் பண்டிகையை ஒட்டி பீன்ஸ், கேரட் உள்ளிட்ட பொருட்களின்

விலை மிக அதிகமாக இருந்தது. ஒட்டு மொத்தமாக காய்கறிகளின் விலையும், பல்லாரி, உள்ளி விலையும் தானாகவே கண்களில் கண்ணீரை வரவழைக்கும் நிலையை ஏற்படுத்தி வருவதாக பெண்கள் மத்தியில் கூறப்படுகிறது.

## வெப்சைட்டில் விவசாயிகள் மண் மாதிரிகளை பதிவு செய்ய வலியுறுத்தல்

செய்துங்கநல்லூர் : அரசின் புதிய வெப்சைட்டில் விவசாயிகள் தங்கள் விவசாய நிலத்தின் மண் மாதிரிகளை பதிவு செய்ய வேண்டும் என கருங்குளம் வேளாண்மை உதவி இயக்குனர் தெரிவித்துள்ளார். கருங்குளம் வேளாண்மை உதவி இயக்குனர் தமிழ்மலர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது, அரசு எப்.சி.எம்.எஸ் என்ற புதிய வேளாண்மை வெப்சைட்டை துவக்கியுள்ளது. இதில் விவசாயிகளின் விபரங்களை பதிவு செய்ய வேண்டிய நிலையில் உள்ளோம். முதற்கட்டமாக விவசாயிகளின் நிலத்தின் மண் மாதிரியை பதிவு செய்ய வேண்டும். இனி வரும் காலங்களில் அரசின் எல்லா திட்டங்களும் இந்த வெப்சைட்டில் பதிவு செய்தவர்களுக்கு மட்டுமே கிடைக்க உள்ளது. இதில் வேளாண்மை துறை, தோட்டக்கலைத் துறை, வேளாண்மை பொறியியல் துறை உட்பட பல்வேறு துறைகளின் திட்டங்களும், இதில் பதிவு செய்த விவசாயிகளுக்கு மட்டுமே கிடைக்கும். எனவே விவசாயிகள் தங்கள் விவசாய நிலத்தின் மண் மாதிரிகளை எடுக்க வேளாண்மை விரிவாக்க மையங்களில் கொடுத்து தங்கள் பெயரை பதிவு செய்ய கேட்டுக் கொள்கிறேன். இது சம்பந்தமாக செக்காரகுடி கிராமத்தில் கிள்ளிகுளம் விவசாயக் கல்லூரி மாணவ மாணவியரும், கோவில்பட்டி வேளாண் ஆராய்ச்சி நிலைய மாணவர்கள், பூவாணி கிராமத்தில் முகாம்களை அமைத்து மண்மாதிரிகள் சேகரித்துள்ளனர். இது சம்பந்தமாக அவர்கள் விவசாயிகளிடம் இதன் முக்கியத்துவத்தை விளக்கி கூறி விழிப்புணர்வை ஏற்படுத்தினர். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

---

இன்றைய வேளாண் செய்திகள்

11.09.2013

## 246 மாணவ–மாணவிகளுக்கு கால்நடை மருத்துவ அறிவியல் பட்டம் கவர்னர் ரோசையா வழங்கினார்

சென்னை

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் 246 மாணவ–மாணவிகளுக்கு கால்நடை மருத்துவ அறிவியல் பட்டங்களை கவர்னர் கே.ரோசையா வழங்கினார்.

பட்டமளிப்பு விழா

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் 16–வது பட்டமளிப்பு விழா சென்னை வேப்பேரியில் உள்ள அரசு கால்நடை மருத்துவக்கல்லூரியில் நேற்று நடைபெற்றது.கவர்னர் கே.ரோசையா தலைமை தாங்கி 246 மாணவ–மாணவிகளுக்கு கால்நடை மருத்துவ அறிவியல் பட்டங்களை வழங்கினார்.246 பேர்களில் 125 பேர் இளநிலை கால்நடை மருத்துவ அறிவியல் மற்றும் கால்நடை பராமரிப்பு மாணவர்கள்.

15 பேர் இளநிலை மீன்வள அறிவியல் மாணவர்கள். 17 பேர் இளநிலை தொழில்நுட்ப மாணவர்கள். 7 பேர் எம்.பில்.படித்தவர்கள். 7 பேர் முதுநிலை மீன் வள அறிவியல் மாணவர்கள். 18 பேர் நேரடியாக பட்டம் பெற்றவர்கள் தவிர தபால் வழியில் 99 பேர் பட்டம் பெற்றனர். மொத்தம் 345 பேர் பட்டம் பெற்றனர்.

24 பதக்கம் பெற்ற மாணவர்

பட்டம் பெற்றவர்களில் 24 பதக்கங்களை ஒரு மாணவர் பெற்று அனைவரின் பாராட்டையும் பெற்றார். அவர் பெயர் ராஜேஷ் குமார் யோகி.வேளாண் விஞ்ஞானி எம்.எஸ்.சுவாமிநாதன் கலந்துகொண்டு பட்டமளிப்பு விழா உரையாற்றினார்.

அப்போது அவர் பேசியதாவது:–

நாட்டின் பொருளாதாரத்தில் கால்நடைகளின் பங்கு

நம் நாட்டின் பொருளாதாரத்தில் கால்நடைமுக்கிய பங்கு வகிக்கிறது. ஆடுகள், மாடுகள் உள்ளிட்ட கால்நடை வளர்ப்பவர்களில் பெரும்பாலானவர்களுக்கு அவற்றை மேய்ப்பதற்கு போதிய நிலம் இல்லை. இதனால் அவர்கள் வளர்ப்பதற்கு ஏற்ப

அவர்களுக்கு லாபம் அல்லது வருமானம் கிடைப்பதில்லை.பால்பண்ணை தொழில் மட்டும் உள்நாட்டு உற்பத்தியில் ரூ.10 ஆயிரம் கோடிக்கு பங்களிப்புச்செய்கிறது.நமது நாட்டில் 42 சதவீதத்தினர் பால் சார்ந்த உணவுகளை சாப்பிடுகிறார்கள்.உலக அளவில் இந்தியாவின் பால் உற்பத்தி அதிகம் என்றபோதிலும் கறவை மாட்டின் திறன் உற்பத்தி உலகத்தரத்தில் ஒப்பிடுகையில் இது குறைவாகும்.

<u>ஊட்டச்சத்து விழிப்புணர்வு</u>

ஊட்டச்சத்து பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு ஆண், ஒரு பெண்ணுக்கு பயிற்சி அளிக்கவேண்டும்.ஊட்டச்சத்துக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் தமிழ்நாட்டில் மாணவர்களுக்கு சத்துணவில் முட்டை வழங்கப்படுகிறது.மேலும் சத்துணவில் பல சத்துள்ள உணவுகளும் வழங்க முதல் அமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார். அதுபோல நீரின்றி அமையாது உலகு என்பதை வலியுறுத்தும் வகையில் மழைநீர் சேகரிப்பு திட்டம் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படுகிறது.இவை அனைத்தும் பாராட்டுக்குரியது.இவ்வாறு எம்.எஸ்.சுவாமிநாதன் பேசினார்.

தொடக்கத்தில் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக துணைவேந்தர் டாக்டர் இரா.பிரபாகரன் வரவேற்று அறிக்கை படித்தார்.விழாவில் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கே.டி.எம்.சின்னையா, செயலாளர் டாக்டர் விஜயகுமார், இயக்குனர் பழனியப்பன், பதிவாளர் அரிகிருஷ்ணன் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

<u>தமிழ்நாட்டை சொந்த மாநிலமாக கருதுகிறேன்</u>

24 பதக்கம் பெற்ற மாணவர் ராஜேஷ் குமார் யோகி நாமக்கல் அரசு கால்நடை மருத்துவ அறிவியல் கல்லூரியில் படித்தவர். ராஜஸ்தான் மாநிலம், சிகார் மாவட்டம், பாட்டன் கிராமத்தைசேர்ந்தவர். பெற்றோர் ஜெக் மோகன் –காயத்திரி தேவி.

ராஜேஷ் குமார் யோகி கூறியதாவது:–

மாநிலம் விட்டு மாநிலம் வந்து படிக்கவந்தேன். இத்தனை பதக்கம் கிடைக்கும் என்று கனவில் கூட நான் நினைத்தது இல்லை. அவ்வப்போது பாடத்தில் சந்தேகம் இருந்தால் அதை உடனே உரிய ஆசிரியரிடம் கேட்பேன். அப்படி சளைக்காமல் எனக்கு விளக்கம் அளித்த ஆசிரியர்களாலும், எனது பெற்றோர்களாலும் தான் எனக்கு இத்தனை பதக்கம் கிடைத்துள்ளது.தமிழ்நாட்டை எனது சொந்த மாநிலமாகவே கருதுகிறேன். அந்த அளவுக்கு நண்பர்களும் பழகினார்கள்.எனது தந்தை கடை வைத்திருக்கிறார். அவர்கள் பணத்தை பெரிதாக நினைக்கவில்லை. அதனால் என்னை உன் இஷ்டபடி படி என்று தான் சொன்னார்கள்.

ராஜஸ்தான் அரசு நடத்திய அரசு கால்நடை மருத்துவர்களுக்கான தேர்வை எழுதி உள்ளேன். அதில் எனக்கு வேலை கிடைத்துவிடும். அதில் சேர்ந்து உண்மையில் இந்திய

மக்கள் கால்நடை வளர்ப்பதில் அவர்களுக்கு உள்ள சிரமம் என்ன என்பதை தெரிந்து கொண்டு, அவர்களின் வளர்ச்சிக்கு என்ன செய்யலாம் என்று அரசுக்கு தெரிவிப்பேன். இதன் மூலம் சமுதாயத்திற்கு சேவை செய்வேன்.இவ்வாறு ராஜேஷ் குமார் யோகி தெரிவித்தார்.

## நாமக்கல் முட்டை விலை

நாமக்கல் மண்டலத்தில்
முட்டை விலை – 340 காசுகள்
முட்டைக்கோழி (கிலோ) – ரூ.62
கறிக்கோழி (கிலோ) – ரூ.70

## கோவை வர்த்தக மையத்தில் 1 லட்சத்து 60 ஆயிரம் கிலோ தேயிலை தூள் ஏலம்

கோவை,
கோவை தேயிலை வர்த்தக மையத்தில் ரூ.2 கோடியே 42 லட்சத்துக்கு தேயிலை தூள் ஏலம் போனது.
தேயிலை வர்த்தக மையம்
கோவை– மேட்டுப்பாளையம் ரோடு ஜி.என்.மில்ஸ் பகுதியில் தேயிலை வர்த்தக மையம் உள்ளது. இங்கு வாரந்தோறும் மின்னணு முறையில் தேயிலை தூள் ஏலம் நடைபெற்று வருகிறது. அதன்படி நடைபெற்ற 36–வது ஏலத்தின் விவரம் வருமாறு:–
தேயிலை தூள் ரகம்
தேயிலை தூள் ரகத்தை பொறுத்தவரை 1 லட்சத்து 70 ஆயிரத்து 612 கிலோ ஏலத்திற்கு வந்தது. இதில் 1 லட்சத்து 60 ஆயிரத்து 10 கிலோ ஏலத்தில் எடுக்கப்பட்டது. இது 94 சதவீதம். விற்பனை மதிப்பு 1 கோடியே 67 லட்சத்து 96 ஆயிரத்து 249 ரூபாய் 7 காசு.
கடந்த ஆண்டு(2012) 36–வது ஏலத்தில் 2 லட்சத்து 48 ஆயிரத்து 925 கிலோ ஏலத்திற்கு வந்தது. இதில் 2 லட்சத்து 39 ஆயிரத்து 652 கிலோ ஏலத்தில் எடுக்கப்பட்டது. இது 96 சதவீதம் ஆகும். விற்பனை மதிப்பு 2 கோடியே 26 லட்சத்து 32 ஆயிரத்து 734 ரூபாய் 88 காசாக இருந்தது.
இலை ரக தேயிலை
இலை ரக தேயிலையை பொறுத்தவரை 1 லட்சத்து 6 ஆயிரத்து 375 கிலோ ஏலத்திற்கு வந்தது. இதில் 98 ஆயிரத்து 578 கிலோ ஏலம் போனது. இது 93 சதவீதம். விற்பனை மதிப்பு 87 லட்சத்து 52 ஆயிரத்து 740 ரூபாய் 62 காசு ஆகும்.

கடந்த ஆண்டின் 36–வது ஏலத்தில் 2 லட்சத்து 4 ஆயிரத்து 585 கிலோ ஏலத்திற்கு வந்தது. அதில் 1 லட்சத்து 64 ஆயிரத்து 436 கிலோ ஏலத்தில் எடுக்கப்பட்டது. அது 80 சதவீதமாக இருந்தது. விற்பனை மதிப்பு 1 கோடியே 49 லட்சத்து 86 ஆயிரத்து 697 ரூபாய் 4 காசாக இருந்தது.

ரூ.2 கோடியே 55 லட்சம்

தற்போது நடைபெற்ற 36–வது ஏலத்தின் தேயிலை தூள் மற்றும் தேயிலை ரகத்தின் மொத்த விற்பனை மதிப்பு 2 கோடியே 55 லட்சத்து 48 ஆயிரத்து 990 ரூபாய் 32 காசு ஆகும். இந்த தகவலை தேயிலை விற்பனை மைய மேலாளர் பிரபாகரன் தெரிவித்தார்.

## கோவையில் மட்டும் தொடரும் விலை உயர்வு பெரிய வெங்காயம் கிலோ ரூ.66; சின்ன வெங்காயம் கிலோ ரூ.60–க்கு விற்பனை

கோவை

கோவையில் பெரிய வெங்காயம் கிலோ ரூ.66–க்கு விற்பனையானது. சின்ன வெங்காயம் கிலோ ரூ.60–க்கு விற்பனையாகிறது.

வெங்காயம்

உற்பத்தி மற்றும் வரத்து குறைவு காரணமாக கடந்த சில வாரங்களாக சின்ன வெங்காயம் மற்றும் பெரிய வெங்காயத்தின் விலை ஏற்ற இறக்கமாக காணப்படுகிறது. திடீரென்று 2 மடங்கு உயர்ந்த வெங்காயத்தின் விலை இன்றும் குறையவில்லை. இதனால் பொதுமக்கள் மற்றும் வியாபாரிகள் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளனர்.

இந்தநிலையில் தற்போது கோவை தியாகி குமரன் மார்க்கெட்டில் சின்ன வெங்காயம் கிலோ ரூ.45 முதல் 60 வரையிலும், பெரிய வெங்காயம் கிலோ ரூ.50 முதல் ரூ.60 வரையிலும் விற்பனையாகிறது. வெங்காயத்தின் தரத்திற்கு ஏற்றவாறு, குறைந்தபட்ச விலை முதல் அதிகபட்ச விலை நிர்ணயிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

காய்கறி ரகங்கள்

மற்ற காய்கறி ரகங்களை ரகங்களை பொறுத்தவரை நாட்டு தக்காளி கிலோ ரூ.14 முதல் ரூ.20 வரையிலும், ஆப்பிள் தக்காளி கிலோ ரூ.16 முதல் ரூ.20 வரையிலும், பீன்ஸ் கிலோ ரூ.30 முதல் ரூ.40 வரையிலும், கேரட் கிலோ ரூ.30 முதல் ரூ.40 வரையிலும், உருளைக்கிழங்கு கிலோ ரூ.14 முதல் ரூ.24 வரையிலும் விற்பனையானது.

சேனைக்கிழங்கு கிலோ ரூ.20 முதல் ரூ.24 வரையிலும், புடலங்காய் கிலோ ரூ.20 முதல் ரூ.30 வரையிலும், சவ்சவ்காய் கிலோ ரூ.12 முதல் ரூ.12 முதல் ரூ.30 வரையிலும், முருங்கைக்காய் கிலோ ரூ.30 முதல் ரூ.40 வரையிலும், கோவைக்காய் கிலோ ரூ.25 முதல் ரூ.36 வரையிலும், தட்டைப்பயிறு கிலோ ரூ.40–க்கும் விற்பனையாகிறது.

பச்சை மிளகாய் கிலோ ரூ.40 முதல் ரூ.56 வரையிலும், பஜ்ஜி மிளகாய் கிலோ ரூ.40 முதல் ரூ.50 வரையிலும், இஞ்சி கிலோ ரூ.60 முதல் ரூ.140 வரையிலும், மாங்காய் கிலோ ரூ.50–க்கும் விற்பனையாகிறது.

<u>தொடரும் விலை உயர்வு</u>

இதுகுறித்து பொதுமக்கள் சிலர் கூறும்போது, 'தமிழ்நாட்டில் எங்கும் இல்லாத வகையில் கோவை நகரில் காய்கறிகளின் விலை உயர்ந்த பின் குறைவதில்லை. சின்ன வெங்காயம், பெரிய வெங்காயம் ஆகியவற்றின் விலை கோவையை தவிர மற்ற நகரங்களில் விலை குறைந்து வருகிறது. மற்ற காய்கறிகளின் விலையும் மற்ற இடங்களை காட்டிலும் கிலோவுக்கு ரூ.10 முதல் ரூ.30 வரை உயர்வாக உள்ளது. இதேபோன்றுதான் அரிசி, பருப்பு, எண்ணை வகைகள் மற்றும் மளிகை பொருட்களின் விலையும் தொடர்ந்து உயர்ந்து வருகிறது. இதுபோன்ற நிலையை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்றனர்.

## தென்னையில் அதிக விளைச்சல் பெற உயிர் உரங்களை இடுங்கள் வேளாண்மை உதவி இயக்குனர் வேண்டுகோள்

உடுமலை

தென்னையில் அதிக விளைச்சல் பெய உயிர் உரங்களை இடுமாறு விவசாயிகளை, வேளாண்மை உதவி இயக்குனர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இது குறித்து உடுமலை வேளாண்மை உதவி இயக்குனர் மா.மகாலிங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

**<u>இயற்கை வேளாண்மை</u>**

இயற்கை வழி வேளாண்மை என்பது நம் முன்னோர்களால் கடைபிடிக்கப்பட்டு வந்த விதி முறையாகும். வேகமான மக்கள் தொகை பெருக்கத்தால் வேளாண்மைத் தொழில் நுட்பத்தில் மாறுபட்ட அணுகு முறையை மேற்கொண்டு விரைந்து உற்பத்தியை பெருக்க வழிவகுத்தன் காரணமாக இன்று உணவு உற்பத்தியில் நாம் தன்னிறவை அடைந்து விட்டாலும் அதிகப்படியான ரசாயன உரங்கள், பூஞ்சாணம் மற்றும் பூச்சிக்கொல்லிகள் மற்றும் களைக்கொல்லிகளை உபயோகதித்தன் காரணமாக மண்வளம், நீர்வளம் மற்றும் காற்று மண்டலம் மாசுபட்டு மனிதன், கால்நடைகள், பறவைகள் மற்றும் இர உயிரினங்களின் உடல் நலம் பாதிப்பு அடைந்து வருகின்றனர். இத்தருணத்தில் சுற்றுச்சூழலோடு ஒன்றிய இயற்கை வேளாண்மையே, சிறந்த மாற்று வழியாக உருவெடுத்துள்ளது. இத்தகைய வேளாண்மை மண்ணின் வளத்தைத் காத்து சுற்றுச்சூழலின் தூய்மைக்காத்து அதன் சமநிலையினை நிலைப்படுத்த உதவுகிறது.

உழவர்கள் தங்களது விளை நிலங்களிலேயே இடு பொருட்களை விளைவித்து இடுவதே இயற்கை வேளாண்மையாகும்.

**<u>தென்னை விவசாயம்</u>**

உடுமலை வட்டாரத்தில் சுமார் 14,500 ஹெக்டர் பரப்பளவில் தென்னை சாகுபடி செய்யப்பட்டு முதன்மையான நிலைப்பயிராக விளங்குகிறது. தென்னை விவசாயிகள் பெரும் பாலும் ரசாயன உரங்களையும் பூச்சி மற்றும் பூங்சாணக் கொல்லிகளையும், களைக்கொல்லிக ளையும் பயன்படுத்துவதால் அவற்றில் எஞ்சியுள்ள நச்சுத்தன்மை தேங்காய்களிலும், இளநீரிலும் உள்ளது என விஞ்ஞானிகளால் கண்டறியப்பட்டுள்ளது. நஞ்சில்லாத உணவே உடலுக்கு நலம் பயக்கும் என்பதால் தென்னைக்கு ஊட்டச்சத்துகளை அளித்திட மக்கிய தொழு உரம், கம்போஸ்டு, மண்புழு உரம், உயிர் உரங்கள், பசுந்தாள் உரங்கள், பசுந்தழை உரங்களை பரிந்துரைப்படி இட வேண்டும். தென்னை மரங்களுக்கு தழைச்சத்தினை அளித்திட அஸோஸ்பைரில்லம் உயிர் உரத்தினை ஒரு மரத்திற்கு 200 கிராம் என்ற அளவில் மக்கிய தொழு உரத்துடன் கலந்து இடுவதால் அதில் உள்ள பாக்டீரியங்கள் காற்று மண்டலத்தில் உள்ள தழைச்சத்தினை (நைட்ரஜன்) கிரகித்து மண்ணில் நிலைநிறுத்தி பயிரின் வேர்களுக்கு அளிக்கிறது. இதனால் பயிர் செழித்து வளர்ந்து அதிக காய்ப்புத்திறனை பெருகிறது.

**<u>உயிர் உரங்கள்</u>**

இதே போன்று பாஸ்போபேக்டீரியா உயிர் உரத்தினை ஒரு மரத்திற்கு 200 கிராம் என்ற அளவில் மக்கிய தொழுஉரத்துடன் கலந்து இடுவதால் மண்ணில் உள்ள கரையாத மனிச்சத்தினை (பாஸ்பரஸ் சத்து) அங்கக அமிலங்கள் மூலமாக கரைத்து பயிருக்கு கிட்டும் நிலைக்கு மாற்றித்தருகிறது. இதன் வாயிலாக பயிருக்கு போதிய மணிச்சத்து கிடைத்து தேங்காய் அளவு, கொப்பரையின் அளவு அதிகரித்து அதிக விளைச்சல் கிடைக்கிறது. மேற்குறிப்பிட்ட அஸோஸ்பைரில்லம், பாஸ்போபேக்டீரியா உயிர்உரங்கள் 200 கிராம் பாக்கெட் ஒன்றுக்கு ரூ.6 என்ற சலுகை விலையில் உடுமலை, குறிச்சிக்கோட்டை வேளாண்மை விரிவாக்க மையங்களில் விவசாயிகளுக்கு வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. இயற்கை வேளாண்மையினை மேற்கொள்ள மேற்கண்ட உயிர், உரங்களை தென்னை விவசாயிகள் பயன்படுத்த கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## அதிக மகசூலை அள்ளித்தரும் கொத்தவரை சாகுபடி



தாராபுரம்,

தாராபுரம் பகுதியில் அதிக மகசூலை அள்ளித்தரும் கொத்தவரை சாகுபடியை விவசாயிகள் அதிக பரப்பளவில் மேற்கொண்டுள்ளனர்.

**கொத்தவரை**

தாராபுரம் பகுதிகளில் குறுகிய காலங்களில் மகசூலை கொடுக்கக்கூடிய தக்காளி, வெண்டை, கத்தரி, பாகற்காய், சுரைக்காய், வெண் பூசனி, கொத்தவரை போன்ற காய்கறி பயிர்களை விவசாயிகள் சாகுபடி செய்து வருகிறார்கள்.

தற்போது அமராவதி ஆற்றில் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளதால் ஆற்றுப்படுகையை ஒட்டி உள்ள கிணறுகளில் நீர்மட்டம் உயர்ந்துள்ளது. எனவே நிலத்தடி நீரைக்கொண்டு விவசாயம் நடைபெறுகிறது.

**கொத்தவரை**

கொத்தவரை சாகுபடி விதைபோட்ட நாளில் இருந்து 40வது நாளில் மகசூல் கிடைக்க தொடங்கிவிடும். மேலும் கொத்தவரை காய்க்கு கடும் கிராக்கி இருப்பதால், விலையும் போதுமான அளவுக்கு கிடைக்கிறது.

5 நாட்களுக்கு ஒரு முறை கொத்தவரை காய்பறிக்கலாம். மேலும் இதை செடிகளில் கொத்து கொத்தாக காய்ப்பதால் குறைந்த பரப்பளவில் பயிர்செய்தால்போதுமானது. எனவே விவசாயிகள் தங்களது நிலங்களில் குறைந்த பரப்பளவில் கொத்தவரைக்காய் சாகுபடி செய்துள்ளனர்.

மேலும் செடிகளில் இருந்து பறிக்கும் கொத்தரை காய்களை ஒட்டன்சத்திரம் காய்கறி மார்க்கெட்டிற்கு கொண்டு சென்று விற்பனை செய்கிறார்கள்.

## மக்காச்சோள சாகுபடி பணிகள் தீவிரம்

குடிமங்கலம்

பி.ஏ.பி.4–வது மண்டல பாசனத்திற்கு 135 நாட்கள் சாகுபடிக்கு 78 நாட்கள் தண்ணீர் வழங்க பொதுப்பணித்துறை அதிகாரிகள் திட்டமிட்டு தற்போது திருமூர்த்தி அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து குடிமங்கலம் ஒன்றியத்திற்கு உட்பட்ட பி.ஏ.பி. பாசனம் நடைபெறும் பகுதிகளில் விவசாயிகள் மக்காச்சோள சாகுபடி செய்யும் பணியில் தீவிரமாக உள்ளனர்.

இது குறித்து விவசாயி தங்கவடிவேலன் கூறியதாவது:–

திருமூர்த்தி அணையில் இருந்து பி.ஏ.பி.4–வது மண்டல பாசனத்திற்கு 78 நாட்கள் மட்டுமே தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ள நிலையில், வடகிழக்கு பருவமழை கை கொடுத்தால் மட்டுமே மக்கச்சோளம் சாகுபடியில் நல்ல மகசூல் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது. சாகுபடி செய்யப்படுள்ள மக்காச்சோள கதிர்கள் பால் பிடிக்கும் பருவத்திற்கு வரும் போது தண்ணீர் பற்றாக்குறை ஏற்படும் நிலை உள்ளது. எனவே அன்றைய நிலையை கருத்தில் கொண்டு பொதுப்ணித்துறை அதிகாரிகள் அணையில் இருந்து கூடுதல் நாட்களுக்கு தண்ணீர் திறந்து விட உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

## கடலூர் மாவட்ட ஏரி–அணைகளில் நீர் இருப்பு விவரம்

கடலூர்,

கடலூர் மாவட்டத்தில் உள்ள அணை மற்றும் ஏரிகளில் தண்ணீர் இருப்பு விவரத்தை பொதுப்பணித்துறை வெளியிட்டுள்ளது.

**பரவலாக மழை**

வெப்பசலனம் மற்றும் வங்கக்கடலில் உருவாகியுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வுநிலை காரணமாக தமிழகத்தில் மழை பெய்யும் என சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்திருந்தது. அதன்படி கடலூர் மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக மாலை மற்றும் இரவு நேரங்களில் மழை பெய்தது. நேற்று இரவும் மழை பெய்தது. நேற்று காலை 8 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் கடலூர் மாவட்டத்தில் அதிகபட்சமாக கீழ்செருவாயில் 37 மில்லி மீட்டர் மழையும், குறைந்த பட்சமாக கடலூரில் 0.80 மில்லி மீட்டர் மழையும் பதிவானது.

**மழை அளவு**

மாவட்டத்தின் பிற இடங்களில் பெய்துள்ள மழை அளவு விவரம் மில்லி மீட்டரில் வருமாறு:–

சிதம்பரம் – 25

மே.மாத்தூர் – 25

புவனகிரி – 24

விருத்தாசலம் – 22.40

குப்பநத்தம் – 22.40

சேத்தியாத்தோப்பு – 20

வேப்பூர் – 20

பெலாந்துரை – 17

கொத்தவாச்சேரி – 13

அண்ணாமலைநகர் – 13

ஸ்ரீமுஷ்ணம் – 8

பரங்கிப்பேட்டை – 5

லால்பேட்டை – 4

காட்டுமன்னார்கோவில் – 2

தொழுதூர் – 2

பண்ருட்டி – 2

வானமாதேவி – 1.20

**நீர்மட்டம் உயர்வு**

தொடர்ந்து பெய்து வரும் மழையால் ஏரி, அணைகளில் நீர் மட்டம் சற்று அதிகரித்துள்ளது.

கடலூர் மாவட்ட அணைகளுக்கு தண்ணீர் வழங்கும் அணைக்கரையில் 8.5 அடி(மொத்த நீர் மட்டம் 9 அடி) தண்ணீர் உள்ளது. வினாடிக்கு 518 கன அடி தண்ணீர் வந்துகொண்டிருக்கிறது. இங்கிருந்து வடவாறு வழியாக 628 கன அடியும், வடக்கு ராஜன் வாய்க்கால் வழியாக 308 கன அடியும், தெற்கு ராஜன் வாய்க்கால் வழியாக 461 கன அடியும், குமுக்கி வாய்க்கால் வழியாக 105 கன அடியும், இதர வாய்க்கால்கள் வழியாக 15 கன அடியும் தண்ணீர் வெளியேற்றப்படுகிறது.

**வீராணம் ஏரி**

வீராணம் ஏரியின் நீர் மட்டம் 46 அடியாக(மொத்த நீர் மட்டம் 47.5 அடி) உள்ளது. ஏரிக்கு வினாடிக்கு 400 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. ஏரியில் இருந்து

பாசனத்துக்கு 200 கன அடி தண்ணீரும், சென்னை குடிநீருக்கு 74 கன அடி தண்ணீரும், வி.என்.எஸ்.எஸ். மதகு வழியாக 227 கன அடி தண்ணீரும் வெளியேற்றப்படுகிறது. சேத்தியாத்தோப்பு அணைக்கட்டின் நீர் மட்டம் 5.6 அடியாக(மொத்த நீர் மட்டம் 7 அடி) இருக்கிறது. அணையில் இருந்து அரிய கோஷ்டி வாய்க்கால் வழியாக வினாடிக்கு 112 கன அடியும், மானம்பாத்தான் வாய்க்கால் வழியாக 135 கன அடியும், பழைய முரட்டு வாய்க்கால் வழியாக 89 கன அடியும் தண்ணீர் வெளியேற்றப்படுகிறது.

**வெலிங்டன் ஏரி**

அதேபோல வாலாஜா ஏரியில் 5.5 அடி(மொத்த நீர் மட்டம் 5.5 அடி) தண்ணீர் உள்ளது. ஏரியில் இருந்து வினாடிக்கு 810 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. பெருமாள் ஏரியின் நீர் மட்டம் 5.5 அடியாக(மொத்த நீர் மட்டம் 6.5 அடி) உள்ளது. வெலிங்டன் ஏரியில் 11.80 அடி(மொத்த நீர் மட்டம் 27.4 அடி) தண்ணீர் உள்ளது. ஏரியில் இருந்து வினாடிக்கு 66 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. தொழுதூர் அணையின் நீர் மட்டம் 3.4 அடியாக(மொத்த நீர் மட்டம் 8 அடி) உள்ளது. அணையில் இருந்து வினாடிக்கு 66 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. பெலாந்துறை அணையின் நீர் மட்டம் 6 அடியாக இருக்கிறது. அணையில் இருந்து வினாடிக்கு 863 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. கோமுகி அணையில் 29 அடி(மொத்த நீர் மட்டம் 46 அடி) தண்ணீர் உள்ளது. அணையில் இருந்து வினாடிக்கு 345 கன அடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது. மணிமுக்தாறு அணையின் நீர் மட்டம் 16 அடியாக(மொத்த நீர் மட்டம் 36 அடி) உள்ளது. மேற்கண்ட தகவல் பொதுப்பணித்துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## கலப்பில்லா விதைகளை பயன்படுத்த அதிகாரி வேண்டுகோள்

நெல்லை,

பிறரக விதைப்பரிசோதனை செய்து கலப்பில்லா விதைகளை பயன்படுத்தி உயர் மகசூல் பெற வேளாண் அதிகாரி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தரமான விதை உற்பத்தியில் கலவன்களை உரிய நேரத்தில் தகுந்த முறையில் நீக்கினால் மட்டும் விதைத் தரத்தைப் பேணிக் காக்க முடியும். நமது மாநிலத்தில் நெல் சான்று விதைகள் உற்பத்தி அதிகமாக செய்யப்படுவதால் கலவன்கள் வயலில் ஏற்படாமல் இருக்க சில நடைமுறைகளை கடைபிடிக்கலாம். அதன் விவரம் வருமாறு:–

**விற்பனை மையங்கள்**

சான்று பெற்ற விதைகளை அரசு அங்கீகாரம் பெற்ற விற்பனை மையங்களிலிருந்து மட்டுமே வாங்கிப் பயன்படுத்துதல் வேண்டும். அதிக அளவில் விதை நெல்

வாங்கும்போது அனைத்து மூட்டைகளும் ஒரே ரகமாக உள்ளனவா எனக் கவனித்து வாங்க வேண்டும்.

இரண்டு அல்லது அதற்கு மேல் ரகங்கள் வாங்கும் போது அவைகளைத் தனித்தனியே வைத்துப் பயன்படுத்துதல் வேண்டும். நாற்று விடுவதற்கு தயார் செய்யும் போது ரகங்கள் கலந்து விடாமலிருக்க வெவ்வேறு தினங்கள் மற்றும் இடங்களில் நாற்று விட்டு நாற்று நடவின்போது வெவ்வேறு தினங்களில் நாற்றுப் பறித்தல் மற்றும் நடுதல் மேற்கொள்ள வேண்டும். நடவு முடிந்து மீதமாகும் நாற்றுகளை உடனடியாக அப்புறப் படுத்துதல் நல்லது.

**<u>கலவன்கள் ஏற்படாது</u>**

ரகங்களைக் தனித்தனியே அறுவடை செய்தல், கதிரடித்தல் மற்றும் காயவைத்தல் வேண்டும். கதிரடிக்கப்படும் இடத்தினை முழுமையாக சுத்தம் செய்து அதன்பின் கதிரடித்தல், காயவைத்தல் பணிகளைக் செய்ய வேண்டும். நன்கு காய வைத்த விதைகளை புதிய கோணிகளில் மட்டுமே சேமித்து வைத்தல் வேண்டும். மூட்டைகளின் மேல் ரகத்தினை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். பல ரகங்கள் உள்ள நிலையில் மூட்டைகளை ரக வாரியாக தனி அறையில் வைத்தல் வேண்டும்.

மேற்கண்ட பத்து கட்டளைகளை கடைபிடிப்பதால், வயலில் கலவன்கள் ஏற்படாது பார்த்துக் கொள்ளலாம்.

**<u>கலப்பில்லாத விதைகள்</u>**

நெல்லை விதைப்பரிசோதனை ஆய்வகத்தில் நீங்கள் உற்பத்தி செய்யும் விதைகளில் பிறரக விதைகள் கலந்துள்ளனவா என்பதை மைகராஸ்கோப் கண்காணித்து ரகத்தின் குணநலன்களை கருத்தில் கொண்டு பிரித்து அறியப்படுகிறது. அதாவது சான்று நெல் விதைகளில் பிறரக விதைகள் 2000 விதைகளுக்கு 4 விதைகள் மட்டுமே இருக்கலாம். ஆதார விதைகளில் பிறரக விதைகள் 2000 விதைகளுக்கு ஒரு விதை மட்டுமே இருக்க வேண்டும். எனவே பிறரக விதைப்பரிசோதனை மூலம் கலப்பில்லாத விதைகளைப் பயன்படுத்தி உயர் மகசூல் அடையுமாறு நெல்லை விதைப்பரிசோதனை அலுவலர் முகம்மது காசீம் கேட்டுக் கொள்கிறார்.

தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்

11.09.2013

## விளைச்சல் அதிகரிப்பு எதிரொலி தனியா, வத்தல், பூண்டு கிலோவுக்கு ரூ.10 குறைந்தது

சென்னை : விளைச்சல் அதிகரிப்பால் தனியா, வத்தல், பூண்டு உள்ளிட்ட மளிகை பொருட்களின் விலை குறைய தொடங்கியுள்ளது. வரும் மாதங்களில் கிலோவுக்கு ரூ.5 முதல் ரூ.10 வரை விலை குறைய வாய்ப்புள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர். தமிழகத்தில் விளைச்சல் அதிகரிப்பு, ஆந்திரா, கர்நாடகாவில் இருந்து நெல் வரத்து அதிகரிப்பு (100 லாரிகளில் வந்தது 400 லாரிகளாக அதிகரிப்பு), நெல் கிலோவுக்கு ரூ.2 முதல் ரூ.4 வரை குறைந்ததன் காரணமாக நெல் இருப்பு வைத்திருப்பவர்கள் விற்க தொடங்கியதன் விளைவு உள்ளிட்ட காரணத்தால் அரிசி விலை குறைய தொடங்கியுள்ளது.

கடந்த வாரம் இட்லி அரிசி (1 கிலோ) ரூ.28 லிருந்து ரூ.26 ஆக குறைந்துள்ளது. சின்ன பொன்னி அரிசி ரூ.28 லிருந்து ரூ.26, அதிசய பொன்னி ரூ.34லிருந்து ரூ.32, பாபட்லா(புதுசு) ரூ.44லிருந்து ரூ.42, பாபட்லா(பழையது) ரூ.50லிருந்து ரூ.48, வெள்ளை பொன்னி ரூ.54லிருந்து ரூ.52, பொன்னி பச்சரிசி ரூ.48லிருந்து ரூ.44, பொன்னி பச்சரிசி (பழையது) ரூ.46 லிருந்து ரூ.40, பொன்னி பச்சரிசி (2ம்ரகம்) ரூ.28 விருந்து ரூ.25 ஆகவும் விலை குறைந்துள்ளது. தமிழகத்தில் தஞ்சாவூர், திருச்சி, திண்டிவனம் உள்ளிட்ட இடங்களில் அறுவடை தொடங்க உள்ளதால் வரும் மாதங்களில் அரிசி விலை கிலோவுக்கு ரூ.2 முதல் ரூ.4 வரை குறைய வாய்ப்புள்ளது. மத்திய பிரதேசம், உத்தரபிரதேசம், பீகார், அரியானா, டெல்லி, ஆந்திரா, கர்நாடகா, ராஜஸ்தான் உள்ளிட்ட மாநிலங்களில் இருந்து மளிகை பொருட்கள் தமிழகத்திற்கு வருகிறது. வடமாநிலங்களில் தென்மேற்கு பருவமழை சரியாக பெய்ததால் அங்கு விளைச்சல் அதிகரித்துள்ளது. இதே போல், தமிழகத்திலும் மளிகை பொருட்களின் விளைச்சல் அமோகமாக உள்ளது. இதனால் மளிகை பொருட்களின் வரத்து அதிகரிக்க

தொடங்கியுள்ளது. இதன் காரணமாக மளிகை பொருட்கள் விலையும் சரிய தொடங்கியுள்ளது. தனியா(கொத்தமல்லி) ரூ.90லிருந்து ரூ.80, துவரம்பருப்பு ரூ.78லிருந்து ரூ.65, தான்சானியா துவரம் பருப்பு ரூ.61 லிருந்து ரூ.56, உளுந்தம்பருப்பு ரூ.70 லிருந்து ரூ.65, கடலைப்பருப்பு ரூ.55 லிருந்து ரூ.56, குண்டு வத்தல் ரூ.120லிருந்து ரூ.110, குண்டு வத்தல்(2ம்ரகம்) ரூ.90லிருந்து ரூ.80, நீட்டு வத்தல் ரூ.90லிருந்து ரூ.80, பூண்டு ரூ.120லிருந்து ரூ.110, நாட்டு பூண்டு ரூ.80லிருந்து ரூ.70, சர்க்கரை ரூ.35லிருந்து ரூ.33, சேலம், தாராப்பூர் வெல்லம் ரூ.50லிருந்து ரூ.45, வேலூர் வெல்லம் ரூ.55லிருந்து ரூ.50, அச்சு வெல்லம் ரூ.65லிருந்து ரூ.60 ஆகவும் விலை குறைந்துள்ளது. அதேபோல், அக்மார்க் நல்லெண்ணெய் ரூ.250லிருந்து ரூ.225, அக்மார்க் நல்லெண்ணெய் (2ம்ரகம்) ரூ.220லிருந்து ரூ.190, விளக்கேத்தும் நல்லெண்ணெய் ரூ.90லிருந்து ரூ.80, கடலை எண்ணெய் ரூ.105 லிருந்து ரூ.95, தேங்காய் எண்ணெய்( முதல் ரகம்) ரூ.110லிருந்து ரூ.95, தேங்காய் எண்ணெய்(2ம்ரகம்) ரூ.90லிருந்து ரூ.80 ஆகவும் விலை குறைந்துள்ளது என்று தமிழ்நாடு மளிகை வியாபாரிகள் சங்க தலைவர் எஸ்.பி.சொரூபன் தெரிவித்தார். மேலும், ‘வடமாநிலங்களில் விளைச்சல் அதிகரிப்பால் மளிகை பொருட்களின் விலை குறைந்து வருகிறது. வரும் மாதத்தில் கிலோவுக்கு ரூ.5 முதல் ரூ.10 வரை குறைய வாய்ப்புள்ளது. அரிசி விலையும் கிலோவுக்கு ரூ.2 முதல் ரூ.4 வரை குறைய வாய்ப்புள்ளது’ என்றார்.

உச்சத்தில் சன்பிளவர், பாமாயில் இந்தியாவுக்கு இந்தோனேஷியா, மலேசியாவில் இருந்து 75 சதவீதம் பாமாயில் இறக்குமதியாகிறது. இந்திய ரூபாயின் மதிப்பு வீழ்ச்சியால் பாமாயில் விலை அதிகரிக்க தொடங்கியது. கடந்த மாதம் பாமாயில் (1 லிட்டர்) ரூ.56 லிருந்து ரூ.68 ஆக உயர்ந்தது. தற்போது ரூபாயின் மதிப்பில் சற்று முன்னேற்றம் கண்டுள்ளதால் பாமாயில் ரூ.64 ஆக சற்று குறைந்துள்ளது. இதே போல் தென் அமெரிக்கா, உக்ரைன், ரஷ்யாவில் இருந்து சன்பிளவர் ஆயில் இறக்குமதியாகிறது. ரூபாயின் மதிப்பு வீழ்ச்சியால் சன்பிளவர் ஆயில் ரூ.86லிருந்து ரூ.96 அதிகரித்தது. தற்போது இது ரூ.93 ஆக குறைந்துள்ளது. ரூபாயின் மதிப்பு குறைவால் ஆயில் இறக்குமதி ஆகும் நாடுகளில் விலை உயரவில்லை. ஆனால், இறக்குமதி செய்யப்படும் இடங்களில் தான் விலை அதிகரித்துள்ளது என்று தமிழ்நாடு அனைத்து மளிகை வியாபாரிகள் சங்க தலைவர் எஸ்.பி.சொரூபன் தெரிவித்தார்.

## தென்னையில் விளைச்சல் பெருக்க உயிர் உரங்கள் பயன்படுத்துவீர்

உடுமலை, : அதிக விளைச்சல் பெற தென்னைக்கு உயிர் உரங் கள் இட வேண்டுமென விவசாயிகளுக்கு வேளாண் அதிகாரி வலியுறுத்தி உள்ளார். உடுமலை வேளாண்மை உதவி இயக்குனர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: உடுமலை வட்டாரத்தில் சுமார் 4500 ஹெக்டேர் பரப்பளவில் தென்னை சாகுபடி செய்யப்பட்டு உள்ளது. தென்னை விவசாயிகள் பெரும்பாலும் ரசாயன உரங்களையும் பூச்சி மற்றும் களைக்கொல்லி களையும் பயன்படுத்துகின்றனர். இதனால் அவற்றில் எஞ்சியுள்ள நச்சுத்தன்மை தேங்காய்களிலும், இளநீரிலும் உள்ளதாக விஞ்ஞானிகளால் கண்டறியப் பட்டுள்ளது. நஞ்சில்லாத உணவே உடலுக்கு நலம் பயக்கும் என்பதால் தென்னைக்கு ஊட்டச்சத்துக்களை அளித்திட மக்கிய தொழு உரம், கம்போஸ்டு, மண்புழு உரம், உயிர் உரங்கள், பசுந்தாள் உரங்கள், பசுந்தழை உரங்களை இட வேண்டும். தென்னை மரங்களுக்கு தழைச்சத்தை அளித்திட அசோஸ்பைரில்லம் உயிர் உரத்தை ஒரு மரத்துக்கு 200 கிராம் வீதம் மக்கிய தொழு உரத்துடன் கலந்து இடுவதால், அதில் உள்ள பாக்டீரியாக்கள் காற்று மண்டலத்தில் உள்ள தழைச்சத்தை (நைட்ரஜன்) கிரகித்து, மண்ணில் நிலைநிறுத்தி வேர்களுக்கு அளிக்கிறது. இதனால் பயிர் செழித்து வளர்ந்து, அதிக காய்ப்பு திறனை பெறும்.

இதேபோல், பாஸ்போ பேக்டீரியா உயிர் உரத்தை ஒரு மரத்துக்கு 200 கிராம் வீதம் மக்கிய தொழு உரத்துடன் கலந்து இடுவதால், மண்ணில் உள்ள கரையாத மணிச்சத்தை (பாஸ்பரஸ் சத்து) அங்கக அமிலம் மூலமாக கரைத்து பயிருக்கு தரும். இதன்மூலம் தேங்காய் அளவு, கொப்பரை அளவு அதிகரித்து அதிக விளைச்சல் கிடைக்கும்.அசோஸ்பைரில்லம், பாஸ்போ பேக்டீரியா உயிர் உரங்கள் 200 கிராம் பாக்கெட் 6 ரூபாய் என்ற சலுகை விலையில் உடுமலை மற்றும் குறிச்சிகோட்டை வேளாண் விரிவாக்க மையங்களில் விற்கப்படுகிறது. இவற்றை தென்னை விவசாயிகள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 100 சதவீத மானியத்தில் பழங்குடியின விவசாயிகளின் வேளாண்மைக்கு 'பவர்டில்லர்'

சேலம்: தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி அவர்களின்

வாழ்வாதாரத்தை மேம்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன் ஒரு பகுதியாக பதிவு பெற்ற சுயஉதவிக்குழுக்கள் மற்றும் கூட்டுறவு சங்கங்கள் மூலம் 100சதவீத மானியத்தில் வேளாண் பவர்டில்லர் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதில், முதற்கட்டமாக சேலம் அயோத்தியாப்பட்டணம் ஒன்றியத்தில் உள்ள அருநூத்துமலை ஊராட்சி பெலாப்பட்டி அண்ணா வேளாண்மை கூட்டுறவு சங்கம் தேர்வு செய்யப் பட்டு, அங்குள்ள பழங்குடியின விவசாயிகளுக்கு பவர்டில்லர் வழங்கும் பணி கள் நடந்து வருகிறது. இதற்கான துவக்க நிகழ்ச்சியில் அயோத்தியாப்பட்டணம் ஒன்றிய தலைவர் மணி தலைமை வகித்தார். மின்னாம்பள்ளி தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத் தலைவர் ராஜசேகரன், மாவட்ட கவுன்சிலர் ரவி, வேளாண்மை உதவி இயக்குநர் செல்லதுரை முன்னிலை வகித்தனர். அண்ணா வேளாண்மை கூட்டுறவு சங்கத் தலைவர் ராஜேந்திரன் பவர்டில்லர் கருவிகளை வழங்கினார். ஏற்பாடுகளை வேளாண் அலுவலர் நவநீதகிருஷ்ணன், உதவி அலுவலர் சத்யமூர்த்தி, அட்மா திட்ட அலுவலர்கள் சக்ரவர்த்தி, துரையரசு, வேளாண் மை விரிவாக்க மைய கண்காணிப்பாளர் ராஜசேகர் ஆகியோர் செய்திருந்தனர்.

## 100 சதவீத மானியத்தில் பண்ணைக்குட்டை அமைக்க விவசாயிகளுக்கு உதவி வேளாண் துறை தகவல்

ஓமலூர்: விவசாயிகள் தங்களுடைய நிலத்தில் முற்றிலும் இலவசமாக 100 சதவீத மானியத்தில் பண்ணை குட்டைகள் அமைக்க அணு கலாம் என காடையாம்பட்டி வட்டார வேளா ண்மை அலுவலக உதவி இயக்குநர் நாசர் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை: நீர் ஆதாரம் குறை ந்து வரும் இந்நேரத்தில் நீர் ஆதாரத்தை பெருக்கவும் நிலத்தடி நீர்மட்டத்தை மேலும் குறையாமல் பாதுகாக்கவும் வேளாண் துறை சார்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. விவசாயிகளுக்கு நீர் ஆதாரத்தை பெரு க்கி அதன் மூலம் விவசாய உற்பத்தியை அதிகரித்து உழ வர் பெருமக்களின் வருவாயை பெருக்கும் உயர்ந்த நோக்கில் தமிழகம் முழுவதும் பண்ணை குட் டைகள் 100 சதவீத மானியத்துடன் முற்றிலும் இலவசமாக அமைத்து தரப்படுகின்றது. பண்ணை குட்டைகளை அமைப்பதின் மூலம் மழை நீரை வீணாக்காமல் அறு வடை செய்து, நிலத்தில் சேமிக்கவும், அந்த உபரிநீரை கொண்டு அதிகம் விவசாயம் செய்யவும் பண்ணைக்குட்டைகள் வழிவகுக்கின்றன. விவசாயிகளின் வருமானத்தை பெருக்கும் வகையில் பண் ணை குட்டைகளில் மீன்கள் வளர்த்து லாபமடையவும் வாய்ப்புள்ளது. தங்களது நிலத்தில் பண்ணை குட்டை கள் அமைக்க விரும்பும் விவசாயிகள் காடையாம்பட்டி வட்டார வேளாண் அலுவலகத்தை அணுகலாம். தங்களது நிலத்தின்

கணிப்பொறி பட் டா ஒளி நகலை இணைத்து விண்ணப்பிக்க வேண்டும். இந்த விண்ணப்பங்கள் வேளாண் இணை இயக்குநர் அலுவலகம் வாயிலாக கலெக்டரிடம் ஒப்புதல் பெறப்படும். இதையடுத்து வட்டார வளர் ச்சி அலுவலர் மூலம் தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் பண்ணைக்குட் டை அமைக்கும் பணி முற்றி லும் இலவசமாக மேற்கொள்ளப்படும். இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## ஸி60 முதல்... கூவிக்கூவி விற்பனை கிருஷ்ணகிரியில் ஆப்பிள் விலை வீழ்ச்சி

கிருஷ்ணகிரி, : கிருஷ்ணகிரி நகரில் குறைந்த விலைக்கு ஆப்பிள் விற்கப்படுவதால், பொதுமக்கள் ஆர்வத்துடன் வாங்கி செல்கின்றனர். இந்தியாவில் வடமாநிலமான இமாச்சலபிரதேசம், உத்திரபிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களில் ஆப்பிள் அதிகமாக விளைகிறது. அதிக வைட்டமின் சத்துக்களை கொண்டுள்ள ஆப்பிள் விலை கடந்த சில மாதங்களாக விண்ணை தொடும் அளவிற்கு இருந்தது. தற்போது அதிக விளைச்சல் காரணமாக, கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு ஆப்பிள் வரத்து அதிகரித்துள்ளது. ரகத்திற்கு தகுந்தவாறு கிலோ ஸி60 முதல் ஸி80 வரை விற்பனை செய்யப்படுகிறது. விலை குறைவால் பொதுமக்கள் அதிக அளவில் வாங்கி செல்கின்றனர். மேலும் நகரின் பல இடங்களிலும், தள்ளு வண்டிகளிலும் வியாபாரிகள் கூவிக்கூவி ஆப்பிளை விற்பனை செய்து வருகின்றனர். இதுகுறித்து பழ வியாபாரிகள் கூறியதாவது: இந்த ஆண்டு வட மாநிலங்களில் ஆப்பிள் விளைச்சல் அதிகளவு உள்ளது. இதனால், வரத்து அதிகரித்து, விலை குறைந்துள்ளது. கடந்த மாதம் ஒரு கிலோ ஸி150 முதல் ஸி200 வரை விற்ற ஆப்பிள், தற்போது ஒரு கிலோ ஸி60 முதலே கிடைக்கிறது. விலை குறைவால் பொதுமக்கள் மிகுந்த ஆர்வத்துடன் கிலோ கணக்கில் வாங்கிச் செல்கின்றனர். இந்த விலை குறைவு எதிர்வரும் 6 மாதங்களுக்கு இருக்கும். இதனால், ஆப்பிள் அதிக அளவில் விற்பனையாகும் என எதிர்பார்க்கிறோம் என்றனர். பொதுமக்கள் கூறும்போது, ஆப்பிள் விலை குறைந்துள்ளது மகிழ்ச்சி அளிக்கிறது. விலை குறைந்துள்ளதால் கூடுதலாக வீட்டிற்கு வாங்கிச் செல்கின்றோம் என்றனர்.

## வரத்து அதிகரிப்பால் வெண்டை விலை சரிவு கிலோ ஸி14க்கு விற்பனை

சேலம், : தமிழகத்தில் வெண்டைக்காய் விளைச்சல் அதிகரிப்பால் விலை படிப்படியாக குறைந்து வருகிறது. தற் போது கிலோ ஸி14 ஆக வெண்டைக்காய் விலை சரிந்துள்ளது. தமிழகத்தில் சேலம், விழுப்புரம், திருவண்ணாமலை, தர்மபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு, கோவை உள்ளிட்ட மாவட்டங்களில் பல ஆயிரம் ஏக்கர் பரப்பில் வெண்டைக்காய்

சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மழை இல்லாததால் வெண்டைக்காய் விளைச்சல் பாதிக்கப்பட்டது. தற்போது பெய் துள்ள மழையால் விளைச்சல் அதிகரித்து, மார்க்கெட்டுக்கு கூடுதலாக வெண்டைக்காய் வர துவங்கியுள்ளது. இதனால் விலை குறைந்து வருகிறது.

இது குறித்து சேலம் காய்கறி வியாபாரிகள் கூறியதாவது: தமிழகத்தில் விளையும் வெண்டைக்காய் கேரளா, கர்நாடகா, ஆந்திரா உள்ளி ட்ட மாநிலங்களுக்கு டன் கணக்கில் அனுப்பப்படுகிறது. வெண்டை பயிர் 6 மாத பயிராகும். சாகுபடி செய்த மூன்றாவது மாதத் தில் வெண்டைக்காய் விளை ச்சல் தரும். கடந்தாண்டு போதிய மழை இல்லாததால் கிணறு, போர்வெல்களில் தண்ணீர் குறைந்தது. சீராக தண்ணீர் விட முடியாததால் வெண்டை செடிகள் காய்ந்து கருகின. இதனால் வெண்டைக்காய் விளைச்சல் குறைந்தது. மார்க்கெட்டுக்கு வழக்கமாக வர வேண்டிய வெண்டைக்காய் வரத்து பாதியாக குறைந்தது. அப்போது ஒரு கிலோ வெண்டைக்காய் ஸி40 வரை விற்பனை செய்யப்பட்டது. இந்நிலையில் கடந்த ஒன்றரை மாதமாக பெ ய்து வரும் மழையால் வெண்டைக்காய் நல்ல விளைச்சலை தந்துள்ளது. வரத்து அதிகரித்துள்ளதால், தற்போது ஒரு கிலோ வெண்டைக்காய் ஸி14 என விற்பனை செய்யப்படுகிறது. இவ்வாறு காய்கறி வியாபாரிகள் கூறினர்.

## அவரைக்காய் சீசன் துவங்கியது கிலோ ஸி40க்கு விற்பனை

சேலம்:சேலத்தில் அவரைக்காய் சீசன் துவங்கியுள்ள நிலையில் நேற்று கிலோ ஸி40க்கு விற்பனை செய்யப்பட்டது. சேலம் மாவட்டத்தின் சுற்று வட்டாரப் பகுதியில் இருந்து அவரைக்காய் வரத்து துவங்கியுள்ளது. நேற்று செவ்வாய்ப்பேட்டை பால்மார்க்கெட் பகுதியில் உள்ள காய்கறி மார்க்கெட்டில் உயர் ரக அவரைக்காய் கிலோ ஸி40க்கும், நாட்டு அவரைக்காய் கிலோ ஸி70க்கும் விற்பனை செய்யப்பட்டது.இது குறித்து வியாபாரிகள் கூறியதாவது: அவரைக்காய் சீசன் தற்பொழுது தான் துவங்கியது. வழக்கமாக அவரைக்காய் ஸி40 முதல் ஸி60 வரை விற்பனை செய்யப்படும். சீசன் துவங்கியுள்ளதால் இன்னும் சில வாரங்களில் அவரைக்காய் வரத்து சந்தையில் அதிகரிக்கும். வரத்து அதிகரிக்கும் போது அவரைக்காய் விலை சரியும் வாய்ப்புள்ளது. இனி அவரை க்காய் விலை ஏற வாய்ப்பில்லை.

இவ்வாறு வியாபாரிகள் கூறினர்.

## நேரடி நெல் விதைப்பில் தொழில் நுட்பங்களை அறிய கிராமம்தோறும் சிறப்பு முகாம்

திருத்துறைப்பூண்டி, : நேரடி நெல்விதைப்பில் உள்ள தொழில்நுட்பங் களை விவசாயிகள் தெரிந்து கொள்வதற்காக மாவட்டம் முழுவதும் கிராமங்களில் சிறப்பு முகாம் நடத்தப்பட உள்ளது. திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி அருகே உள்ள சிங்களாந்தி கிராமத்தில் நேரடி நெல்விதைப்பில் களைஒழிப்பு முகாம் நடைபெற்றது. வேளாண்மைத்துறை துணை இயக்குனர் மயில்வாகனன், இணை இயக்குனர் கணேசன், நகர்மன்ற தலைவர் உமாமகேஸ்வரி ஆகியோர் முன்னிலை வகித்தனர். வேளாண்மைதுறை உதவி இயக்குனர் நடேசன் வரவேற்றார். மாவட்ட கலெக்டர் நடராஜன் விவசாயிகளுக்கு வேளாண் கருவிகளை வழங்கி பேசுகையில், வேளாண்மை திட்டங்கள் அனைத்தும் திருத்துறைப்பூண்டியிலிருந்து தொடங்கப்படுகிறது. களை ஒழிப்பை முழுமையாக செய்ய வேண்டும். நேரடி நெல்விதைப்பில் உள்ள தொழில்நுட்பங்களை விவசாயிகள் தெரிந்து கொள்வதற்காக மாவட்டம் முழு வதும் கிராமங்களில் சிறப்பு முகாம் நடத்தப்பட உள்ளது. இந்த ஆண்டு விவசாயிகளுக்கு 50 சதவீதம் மானியத்தில் விதை நெல் மற்றும் வேளாண் கருவிகள் உள்ளிட்டவை மானிய விலை யில் அரசு வழங்கி உள்ளது. விவசாயத்திற்கு மாவட்ட நிர்வாகம் உழை த்து வருகிறது. இதனை பயன்படுத்தி விவசாயிகள் இந்த ஆண்டு ஏக்கருக்கு 20 டன் மகசூல் எடுக்க வேண்டும் என்றார். கிரியேட் பயிற்சி இயக்குனர் ஜெயராமன், விவ சாயி சந்திரராமன் ஆகி யோர் பேசினார்கள். முகா மில் விவசாயிகள், வேளாண்மைத்துறை அலுவலர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். வேளா ண்மை உதவி அலுவலர் சுவாமிநாதன் நன்றி கூறினார்.

## மழைக்காலங்களில் கால்நடைகளை காப்பது எப்படி?

தேனி, : மழைக்காலங்களில் கால்நடைகளை பாதுகாப்பது குறித்து கால்நடை உதவி இயக்குநர் அலுவலகம் ஆலோசனை வழங்கியுள்ளது.

மழைக்காலங்களில் சில தொற்று நோய்களால் கால்நடைகள் பாதிப்படைகின்றன. அவற்றில் தொண்டை அடைப்பான், சப்பை நோய், ஆடுகளில் துள்ளுமாரி நோய்

ஆகியவை குறிப்பிடத்தக்கவை. சப்பைநோய் ஏற்பட்டால் பாதிக்கப்பட்ட கால்நடைகள் கால்களை தரையில் ஊன்ற முடியாமல் நொண்டி நடக்கும். முன்சப்பை அல்லது பின் சப்பையில் வீக்கம் ஏற்பட்டு அவைகள் இறக்க நேரிடும். இதைத்தவிர்க்க மழைக்காலம் துவங்குவதற்கு முன்னால் தடுப்பூசி போட வேண்டும்.

ஆடுகள் இக்காலங்களில் திடீரென துள்ளி இறக்கும். துள்ளுமாரி நோய் எதிர்பாராத விதமாக இவ்வாறு தாக்குவதால் நோய் கண்ட ஆடுகளுக்கு மருத்துவ சிகிச்சை பலன் அளிப்பது இல்லை. இந்நோயால் நல்ல திடகாத்திரமான ஆடுகள் பாதிப்புக்குள்ளாகின்றன. ஆடுகளுக்கு தடுப்பூசி போடுவதன் மூலம் இந்நோய் வராமல் தடுக்கலாம். 3 மாத வயதுக்கு மேற்பட்ட குட்டிகளுக்கு தடுப்பூசி போட வேண்டும். மழைக்காலங்களிலும், வரும் குளிர்காலத்திலும் கன்றுகள் இறப்பு ஏற்படலாம். மழைக்காலங்களில் கன்றுகளுக்கு நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக இருப்பதால் வைட்டமின் ஏ சத்தை தீவனத்துடன் கொடுக்கலாம். அல்லது மருத்துவரின் ஆலோசனையின்படி ஊசி மூலம் செலுத்தலாம். மழைக்காலங்களில் கன்று இறப்பைக் குறைத்திட மாட்டுத் தொழுவங்களை தண்ணீர் தேங்காதபடி மேடான இடத்தில் அமைக்க வேண்டும். அவ்வப்போது சாணம், சிறுநீர் போன்ற கழிவுகளை உடனுக்குடன் அகற்ற வேண்டும். தக்க நடவடிக்கைகளை மழைக்காலம் தொடங்கும் முன் நடைமுறைப் படுத்தினால் கால்நடைகளை நோயிலிருந்து பாதுகாத்து பொருளாதார இழப்பை தவிர்த்து கால்நடை வளர்ப்பில் லாபம் காணலாம்.

## தென்மேற்கு பருவமழை துவக்கம் மாவட்டத்தில் நெல் விதைப்பு தீவிரம்

ராமநாதபுரம், : தென்மேற்கு பருவமழை துவங்கியதை அடுத்து ராமநாதபுரம் மாவட்டத்தில் நெல் விதைப்பு பணிகள் தீவிரமடைந்துள்ளன. ராமநாதபுரம் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழையே நம்பியே பெ ரும்பாலான பகுதிகளில் விவசாயம் செய்யப்படுகிறது. மாவட்டத்தில் மொத்த சாகுபடியில் 70 சதவீதம் நெல் சாகுபடி செய்யப்படுகிறது.ஒரு லட்சத்து 30 ஆயிரம் ஹெக்டேர் பரப்பில், 74 ஆயிரம் ஹெக்டேரில் வடகிழக்கு பருவமழையை எதிர்பார்த்து விதைக்கப்படுகிறது. மீதமுள்ள 56 ஆயிரம் ஹெக்டேரில் பாசன கண்மாய்களின் ஆயக்கட்டு பகுதிகளில் மானாவாரியாக பயிரிடப்படுகிறது. மீதமுள்ள பகுதிகளில் வடகிழக்கு பருவமழையின் மூலம் கண்மாய்களில் சேமிக்கப்படும் தண்ணீரை கொண்டு, இறவை பயிராக பயிரிடப்படுகிறது. கடந்த 2 வாரமாக மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழை பெய்து வருவதால் விவசாயிகள் நெல் விதைப்பு பணிகளை துவக்கி உள்ளனர். ராமநாதபுரம்,

நயினார்கோவில், உத்தரகோசமங்கை மற்றும் சுற்று வட்டார கிராமங்களில் மாடுகள் மூலம் உழுதும், டிராக்டர் மூலம் உழுதும் நெல் விதைப்பு பணிகளில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். நயினார்கோவில் ஒன்றியத்தில் வயலூர், சிறுவயல், பெருங்களூர், குளத்தூர், தியாகன்சேரி, பி.கொடிக்குளம் மற்றும் சுற்று வட்டார கிராமங்களில் நூற்றுக்கணக்கான ஏக்கர்களில் நெல் விதைப்பு செய்யப்பட்டு வருகிறது. டிராக்டர்களுக்கு கிராக்கி ஏற்பட்டுள்ளதால் இரவிலும் டிராக்டர் மூலம் நிலங்களை விவசாயிகள் உழுது வருகின்றனர். மாவட்டத்தில் பரமக்குடி, முதுகுளத்தூர், கமுதி, சாயல்குடி, ஆர்.எஸ்.மங்கலம், திருவாடானை உள்ளிட்ட பகுதிகளிலும் மானாவாரி நெல் விதைப்பு பணி தீவிரமடைந்துள்ளது.